# தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

# CCE

## சமூக அறிவியல் ஆசிரியர் கையேடு



## தொடக்க நிலை

## (3, 4, 5)

மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

சென்னை– 600 006



www.TeacherTN.com

© STATE COUNCIL OF EDUCATIONAL RESEARCH AND TRAINING, CHENNAI-6
2012

**திரு. கு. தேவராஜன்,**
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600 006

**முனைவர் மு. பழனிச்சாமி**
இணை இயக்குநர்
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600 006.

**முனைவர் எஸ்.கண்ணப்பன்**
இணை இயக்குநர்
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600 006.

**ஒருங்கிணைப்பாளர்**

**திருமதி. ப. ஈஸ்வரி**
உதவிப்பேராசிரியர்
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600 006.

**கட்டகத் தயாரிப்பு**

**திரு.ஜோ.அருள் ஜார்ஜ் பீட்டர்,**
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
முனைஞ்சிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

**திருமதி.தி.அகிலா,**
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

**திருமதி.சா.புனித மேரி,**
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
தே.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

**திருமதி.அ.கலைவாணி,**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
காளம் பாளையம், தொண்டாமத்தூர் ஒன்றியம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

**திரு.ஜே.பால சரவணன்,**
இடைநிலை ஆசிரியர்,
செய்ன்ட் மேரீஸ் ஆர்.சி. நடுநிலைப் பள்ளி,
ஆத்தூர், சேலம் மாவட்டம்.

**திரு.ஸ்ரீ.திலீப்,**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி ,
மேல்பாப்பம்பட்டி, விழுப்புரம் மாவட்டம்.

**கணினி அச்சு**

**திருமதி.தா.அல்போன்சா மேரி,**
புனித அன்னாள் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், மாதவரம், சென்னை– 110



www.TeacherTN.com

**கு. தேவராஜன,**
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600 006.

## அணிந்துரை

***கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை. . .***

தரமான கல்வி நோக்கிய தமிழக அரசின் இலக்கில் முன் முயற்சியாக முப்பருவக் கல்வி முறையும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடும் வரும் கல்வியாண்டு முதல் (2012–2013) தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்றுமுதல் எட்டாம் வகுப்புவரை நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இந்தியாவில் முதன்முறையாக முப்பருவ கல்விமுறையையும் புதிய மதிப்பீட்டு முறையையும் தமிழகமே அறிமுகப்படுத்துகிறது. இந்தப் பெருமிதத்துடன் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுமுறைக்கான வழிகாட்டுக் கையேடு, முப்பருவக் கல்விமுறைக்கான வழிகாட்டு நெறிமுறைகள், புதிய மதிப்பீட்டு முறையைச் செயல்படுத்துவதற்கான அனைத்துப் பாட ஆசிரியர் கையேடுகளையும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் வடிவமைத்துள்ளது.

இவ்வாசிரியர் கையேடுகள், பாடநூலில் மாணவர்களை மதிப்பீடு செய்யும் செயல்பாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றன. இச்செயல்பாடுகள் கையேட்டில் விளக்கப்படுவதோடு, மாணவர்களிடமுள்ள திறன்களை முழுமையாக தரஅளவீடு செய்வது எவ்வாறென ஆசிரியருக்கு வழிகாட்டுகிறது. இதன்மூலம் மாணவனுள் பொதிந்துள்ள ஒரு திறன் மட்டுமல்லாது பன்முகத்திறன்களும் வெளிக்கொணரப்படும். இக்கையேடு, மாணவனின் தனித்திறன்களை அடையாளங்கண்டு பருவந்தோறும் ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் முழுமையாகவும் மதிப்பீடு செய்ய ஆசிரியருக்கு உறுதுணையாகத் திகழ்கிறது.

இப்புதிய மதிப்பீட்டுமுறையினால், மாணவரின் கல்விச் செயல்பாடுகள், கல்வி இணைச் செயல்பாடுகள், உடல்நலக்கல்வி, யோகக் கலை, நன்னடத்தைகள், நன்னலம், வாழ்வியல் திறன்கள் என அனைத்துக் கூறுகளும் மதிப்பிடப்படுகின்றன. இவ்வாறு மதிப்பிடுவதனால் மாணவனின் ஆளுமை வளர்ச்சியை முழுமையாக அறியமுடிகிறது. மேலும், மாற்றுத்திறனாளிகளின் கற்றல் இயல்பு மற்றும் வேகத்திற்கு ஏற்ப மதிப்பிடுவதற்கான நெகிழ்வுத்தன்மைகளும் விளக்கப்படுகின்றன.

காலந்தோறும் கற்றல்முறைகளில் செய்யப்பட்டு வரும் மாற்றங்களையடுத்துத் தற்போது மதிப்பீட்டு முறையிலும் புதிய மாற்றம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்மாற்றம் ஆசிரியர்களை ஊக்குவிப்பதோடு மாணவர்களையும் மேம்படுத்தி மகிழச் செய்யும்.

ஆசிரியர்கள், கையேட்டிலுள்ள கருத்துகளை முழுமையாக உள்வாங்கிக்கொண்டு வகுப்பறையில் செயல்படுத்துதல் வேண்டும். அப்போதுதான் இளந்தலைமுறையினரை ஆளுமைமிக்கவர்களாகவும் தன்னம்பிக்கை உடையவர்களாகவும் வருங்காலத்தை வடிவமைப்பவர்களாகவும் உருவாக்க இயலும். இந்தியாவின் முன்னேற்றம் நான்கு சுவர்களுக்குள்ளே உருவாகிறது என்பதனைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு ஆசிரியரும் செயல்படவேண்டும் என்பது அனைவரின் அவாவாக உள்ளது. எனவே ஆசிரியர்கள், தங்களுக்கு அளிக்கப்பட்டப் பொறுப்பினை அக்கறையுடனும் பொறுப்புணர்வுடனும் செயல்படுத்தவேண்டுமென விழைகிறேன்.

**வாழ்த்துகளுடன்**
**இயக்குநர்**



www.TeacherTN.com

# பொருளடக்கம்


⇒ ஆசிரியருக்கு 1

⇒ கட்டகத்தின் உள்ளே 7

⇒ மூன்றாம் வகுப்பு வளரறி மதிப்பீட்டுச் செயல்பாடுகள் 8

⇒ மூன்றாம் வகுப்பு தொகுத்தறி மதிப்பீட்டு வினாத்தாள் 30

⇒ நான்காம் வகுப்பு வளரறி மதிப்பீட்டுச் செயல்பாடுகள் 32

⇒ நான்காம் வகுப்பு தொகுத்தறி மதிப்பீட்டு வினாத்தாள் 51

⇒ ஐந்தாம் வகுப்பு வளரறி மதிப்பீட்டுச் செயல்பாடுகள் 54

⇒ ஐந்தாம் வகுப்பு தொகுத்தறி மதிப்பீட்டு வினாத்தாள் 74




www.TeacherTN.com

## ஆசிரியருக்கு . . .

கற்றல் – கற்பித்தல் நிகழ்வில் மாணவர்கள் கற்றல் அடைவினை பெற்றுள்ளனரா ? என்பதை அறிய மதிப்பீடு செய்கிறோம். காலம் காலமாக மதிப்பீடு என்பது எழுத்துத்தேர்வாக மட்டுமே செய்யப்பட்டுவருகிறது.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம், அவர்களுக்கு முறையான, தரமான, சமமான கல்வியை அளிக்க வலியுறுத்துகிறது. அதனால், கற்றல் மற்றும் மதிப்பீடும் முறையிலும் புதிய மாறுதல் தேவைப்படுகிறது. அதற்கேற்ப தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (CCE) உருவாக்கப்பட்டுள்ளது.

### தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (CCE)

- தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையில் மாணவர்களைத் தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் மதிப்பீடு செய்ய முடியும்.
- இந்த மதிப்பீடு மாணவனின் முழுமையான உடல், மன வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உள்ளடக்கியது.
- இது பயனுள்ள விரும்பத்தக்க மற்றும் எளிமையான ஒரு மதிப்பீட்டுமுறை.
- இது பாடம் மற்றும் பாட இணைச் செயல்பாடுகளைக் கொண்டுள்ளது.

| <u>கல்விசார் செயல்பாடுகள்</u>(Scholastic) | <u>கல்வி இணைச் செயல்பாடுகள்</u> (Co-Scholastic) |
|---|---|
| தமிழ்<br>ஆங்கிலம்<br>கணக்கு<br>அறிவியல்<br>சமூக அறிவியல்<br>உடற் கல்வி | வாழ்க்கைத்திறன்கள்<br>நன்னடத்தை மற்றும் மதிப்புணர்தல்<br>யோகா மற்றும் பிற உடற்பயிற்சிகள்<br>பாரம்பரிய கலைகள், கைவேலைப்பாடுகள்<br>மரபு விளையாட்டுகள்<br>மன்றச் செயல்பாடுகள் |

### மதிப்பீட்டு முறை

பாடச் செயல்பாடுகள் இரண்டு வகைகளில் மதிப்பீடு செய்யப்படுகிறது.






www.TeacherTN.com

## வளரறி மதிப்பீடு (FA)

- கற்றல் – கற்பித்தல் செயலில் தொடர்ச்சியாகச் செய்யப்படும் மதிப்பீடு.
- குறிப்பிட்ட இடைவெளியில் குறைந்த அளவு பாடப் பகுதியில் நடத்தப்படுவது.
- தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதால் மாணவர்களின் அச்சம் மற்றும் மன அழுத்தம் குறைகிறது.
- தொடர்ச்சியான மதிப்பீடு மாணவர்களின் அடைவு நிலைகளை அறிய உதவுகிறது.
- ஆசிரியர் தன் கற்பித்தலை மதிப்பீடு செய்து கொள்ள உதவுகிறது.
- குறை அறிதல் மற்றும் குறைதீர் கற்பித்தலுக்கு வழி உண்டு.

## வளரறி மதிப்பீட்டின் வகைகள்

- வளரறி மதிப்பீடு (அ) – FA(a)
- வளரறி மதிப்பீடு (ஆ) – FA(b)

## வளரறி மதிப்பீடு (அ) – FA(a)

- வளரறி மதிப்பீடு (அ) என்பது செயல்பாடுகள் மூலம் மதிப்பீடு செய்வது.
- கற்றல் – கற்பித்தல் நிகழ்வின்போது செய்யப்படும் மதிப்பீடு.
- மாணவர்களின் கற்கும் இயல்புக்கு ஏற்ப மதிப்பீடு செய்ய உதவுகிறது.
- மாணவர்களின் கற்றல் குறையறிந்து அதைத் தீர்ப்பதற்கு வாய்ப்புண்டு.
- இந்த மதிப்பீடு, மாணவர்களின் தனிப்பட்ட திறன், ஈடுபாடு, பங்கேற்கும் தன்மை, மனப்பாங்கு ஆகியவற்றிற்கு பாடப்பொருளைவிட அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

### தொடக்க நிலையில் சமூக அறிவியலுக்கு ஏற்ற செயலனுபவங்கள்

| வ.எண் | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|
| 1 | குழு விவாத முறை | Group Discussion |
| 2 | கதை கூறல் | Story Telling mothod |
| 3 | நாடக முறை | Dramatization |
| 4 | வினா விடை முறை | Enquiry Method |
| 5 | சுயசரித முறை | Biographical Method |
| 6 | பங்கேற்பு முறை | Participatory Method |
| 7 | கண்டுபிடிப்பு முறை | Discovery Method |
| 8 | செயல்திட்ட முறை | Project Method |
| 9 | விரிவுரை முறை | Lecture Method |
| 10 | செய்து கற்றல் முறை | Practical method |
| 11 | தானே கற்றல் முறை | Self Learning Method |
| 12 | வரைபடம் வரைதல் | Mapping |
| 13 | கலந்துரையாடல் முறை | Discussion Method |
| 14 | விளையாட்டு முறை | Play Way Method |
| 15 | தனி நடிப்பு முறை | Mono Act Method |



www.TeacherTN.com

**தொடக்க நிலையில் சமூக அறிவியல் பாடத்தில் வளரறி மதிப்பீடு (அ) FA (a) – செயல்பாடுகள்**

| | | |
|---|---|---|
| 1. | வினாடி வினா | Quiz |
| 2. | படத்தொகுப்பு | Album |
| 3. | மாதிரிகள் | Models |
| 4. | தொடர் விவர விளக்கப்படம் | Flow Chart |
| 5. | மின்/காட்சி அட்டைகள் | Flash Cards |
| 6. | சேகரிப்பு | Collection |
| 7. | படங்கள் | Pictures |
| 8. | புதிர் | Riddle |
| 9. | பொருத்துதல் | Matching |
| 10. | வகைப்படுத்துதல் | Classification |
| 11. | இடங்காணல் | Locating the Places |
| 12. | வேறுபடுத்துதல் | Distinguishing |
| 13. | செயல்திட்டம் | Project |
| 14. | சுவரொட்டி | Wall Poster |
| 15. | அட்டவணைப்படுத்துதல் | Tabular Column |
| 16. | வரைந்து வண்ணமிடுதல் | Drawing and Colouring |
| 17. | விழாக் கொண்டாடுதல் | Celebration |
| 18. | போட்டிகள் | Competition |
| 19. | கைவினைப்பொருட்கள் | Craft work |
| 20. | உருவொற்றி வரைதல் | Finger Print Pictures |
| 21. | புள்ளி விவரங்கள் சேகரித்தல் | Survey |
| 22. | புனைபாவம் | Miming |
| 23. | குறியீடு உருவாக்குதல் | Creating Symbols |
| 24. | நாட்டுப்புறப் பாடல் | Folk Song |
| 25. | குழு விவாதம் | Group Discussion |
| 26. | கதைகூறுதல் | Story Telling |
| 27. | நாடகம் நடித்தல் | Dramatization |
| 28. | தன் வரலாறு கூறுதல் | Auto Biography |
| 29. | வரைபடம் வரைதல் | Mapping |
| 30. | கலந்துரையாடல் | Discussion |
| 31. | விளையாட்டு முறை | Playway Method |
| 32. | தனி நடிப்பு | Mono Act |
| 33. | பொம்மலாட்டம் | Puppetry |
| 34. | பங்கேற்று நடித்தல் | Role play |
| 35. | குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல் | Speaking on a topic |
| 36. | ஓவியம் வரைதல் | Drawing |
| 37. | விவரித்தல் | Discription |
| 38. | நிகழ்வுகளைப் பதிவு செய்தல் | Recording the Events |
| 39. | தகவல் திரட்டுதல் | Data Collection |
| 40. | கண்காட்சி/பொருட்காட்சி நடத்துதல் | Exhibition |
| 41. | சிறு ஆய்வுகள் நடத்துதல் | Small Research |
| 42. | நேர்காணல் | Interview |

இச்செயல் வகைகளில், ஒவ்வொரு பாடத்திலும் சில மதிப்பீட்டுச் செயல்பாடுகள் வடிவமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை மாதிரியாகக் கொண்டு தாங்கள் தங்கள் வகுப்பறைத் தேவைக்கேற்ப செயல்களை வடிவமைத்துக் கொள்ளவும்.



www.TeacherTN.com

**<u>வளரறி மதிப்பீடு (அ) செயல்பாடுகள் கீழ்க்காணும் வகைகளில் அமையலாம்</u>**

- ✓ தனி யாள் செயல்பாடு – Individual activity
- ✓ குழுச் செயல்பாடு – Group activity
- ✓ முழு வகுப்புச் செயல்பாடு – Whole Class activity

பாடப்பொருளுக்கான, செயல்பாட்டின் தன்மைக்கேற்ப ஆசிரியர் குழுக்களை வடிவமைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு குழுவிலும் சம அளவில் மீத்திறன், சராசரி மற்றும் கற்றல் அளவில் பின்தங்கிய மாணவர்கள் இடம் பெறுமாறு அமைத்தல் வேண்டும். ஒவ்வொரு கற்றல் செயல்பாட்டின் போதும் குழுக்களை மாற்றி அமைத்தல் வேண்டும்.

**வளரறித்தேர்வு 'அ' செயல்பாடுகளை மேற்கொள்ளும் போது அதில் வெளிப்படும் வாழ்க்கைத் திறன்கள் நன்னடத்தை மாற்றம் மதிப்புணர்தல், நாட்டுப்புறக் கலைகள், கைவேலைப்பாடுகளையும் உற்றுநோக்கி மதிப்பீடு செய்தல் வேண்டும்.**

**<u>சமூக அறிவியலில் , வளரறி மதிப்பீடு (ஆ) – FA(b)</u>**

- ❖ மாணவர்களுடைய பாடப் பொருள் அடைவை மதிப்பீடு செய்வது .
- ❖ இது பெரும்பாலும் எழுத்து வடிவிலான சிறு தேர்வாக அமையும்.
- ❖ இது ஒவ்வொரு பாடக் கருத்து அல்லது கற்றல் அலகின் இறுதியில் நடத்தப்படும்.
- ❖ இதிலும் குறைதீர் கற்றலுக்கு வழி உண்டு.
- ❖ வினாடி வினா
- ❖ புதிர் விளையாட்டு
- ❖ சிறு தேர்வு (Slip test) போன்ற வகைகளில் அமையலாம்.

**<u>வளரறி மதிப்பீடு (ஆ) – FA(b) சிறு தேர்வுகள்</u>**

சரியா ? தவறா ?
ஆம்.இல்லை
பலவுள் தெரிவு
பொருத்துக
கோடிட்ட இடங்களை நிரப்புக
வரிசைப்படுத்துக
சொல்லக்கேட்டு எழுதுக
சிறு வினா
குறு வினா
காலி இடங்களை நிரப்புக
வினாடி வினா
விடுகதைகள், புதிர்கள்
சிக்கல் தீர்க்கும் செயல்பாடுகள்
திறன் சார்ந்து வரைதல் போன்ற முறைகளில் நடத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தேர்வுகள் மட்டுமின்றி பாடப்பகுதிகளுக்கும் திறனுக்கும் ஏற்ற பல்வேறு வகையான சிறு தேர்வுகளைத் தேவைக்கேற்ப ஆசிரியர் வடிவமைத்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வளரறி மதிப்பீட்டின் இறுதியிலும் தேவை உள்ள மாணவர்களைக் கண்டறிந்து குறைதீர்க் கற்பித்தல் செயல்பாடுகளை வடிவமைத்துக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.



www.TeacherTN.com

## மாற்றுத்ள திறனாளிகளுக்கான மதிப்பீட்டு வழிமுறைகள்

- மாற்றுத் திறனாளிகள் அவரவர் வேகத்திற்கு ஏற்ப இயன்ற அளவு கற்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
- எளிமையாகவும் பல்வேறுவிதமான கற்றல் வாய்ப்புகளை அளிப்பதாகவும் செயல்பாடுகளை அமைத்தல் வேண்டும்.
- அவர்களது இயலாமையைக் காரணம் காட்டி கற்றலை ஒரு எல்லைக்குள் நிறுத்துதல் கூடாது.

## வளரறித் மதிப்பீடு (அ) FA(a) மற்றும் வளரறித் மதிப்பீடு (ஆ) FA(b) மதிப்பீடு செய்யும் முறைகள்

ஒவ்வொரு பருவத்திலும் அனைத்துப் பாடங்களுக்கும் சேர்த்துக் குறைந்தது நான்கு வளரறி (அ) மதிப்பீடுகள் நான்கு வளரறி (ஆ) மதிப்பீடுகளும் நடத்தப்பட வேண்டும். மதிப்பீடு ஒவ்வொன்றும் 10 மதிப்பெண்களைக் கொண்டது. அவற்றுள் மாணவர்கள் சிறப்பாகச் செயல்பட்ட இரண்டு வளரறி மதிப்பீடு (அ) மற்றும் இரண்டு வளரறித் மதிப்பீடு(ஆ) மதிப்பெண்கள் கணக்கில் எடுக்கப்பட்டு மதிப்பெண் மற்றும் தரம் பதிவேடுகளில் (Mark & Grade Register) பதிவு செய்யப்படும்.

## தொகுத்தறி மதிப்பீடு

- ஒவ்வொரு பருவ இறுதியிலும் மாணவர்கள் கற்றல் அடைவு பெற்றுள்ளார்களா ? என்பதை அறிவதற்காக வரையறைகளுக்கு உட்பட்டு திட்டமிட்டு முறையாக வழங்கப்படுகின்ற எழுத்துத் தேர்வு தொகுத்தறி மதப்பீடுஆகும்.
- இது தனியாள் மதிப்பீடு.
- வினாத்தாள், வினாத் திட்ட வரைவை (Blue Print) அடிப்படையாகக் கொண்டது.
- அறிதல், புரிதல், பயன்படுத்துதல், திறன் ஆகியவை வெளிப்படும் வகையில் வினாக்கள் அமைக்கப்படும்.
- காலவரையறைக்கு உட்பட்டது.

ஒவ்வொரு பருவ இறுதியிலும் தொகுத்தறி மதிப்பீடு 60 மதிப்பெண்களுக்கு நடத்தப்படும். தொகுத்தறி மதிப்பீட்டில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரம் பதிவேடுகளில் பதிவு செய்யப்படும்.

ஒவ்வொரு பருவத்திற்கும் வளரறி மதிப்பீட்டிற்கு (FA) 40 மதிப்பெண்களும் தொகுத்தறி மதிப்பீட்டிற்கு (SA) 60 மதிப்பெண்களும் என மொத்தம் 100 மதிப்பெண்கள், ஒவ்வொரு மாணவனுக்கும் அவன் பெற்ற மதிப்பெண்களுக்கு ஏற்ப தரம் வழங்கப்படும்.

### வரைபடங்கள் பயன்படுத்தும் முறை

நிலவரைபடம் என்பது ஒரு உண்மைப் பொருளின் அடையாளம். நாம் வாழும் புவிப்பரப்பை உள்ளதை உள்ளபடி அளவை அடிப்படையில், சுருங்கிய வடிவில் காட்டுவது தான் வரைபடங்கள் ஆகும். தொடக்க நிலை வகுப்புகளில் நில வரைபடங்களைத் தெளிவாகக் கற்றுக் கொள்ள கீழ்க்காணும் கூறுகள் உதவியாக உள்ளன. அவை

1. தலைப்பு (Heading)
2. திசை (Direction)
3. வண்ணம் (Colour)
4. குறிப்பு (Legends)
5. குறியீடு (Symbol)

பூமியின் நிலத்தோற்றங்களை வரைபடங்களில் பார்த்து அறிந்து கொள்ள வண்ணங்கள், திசைகள் மற்றும் குறியீடுகள் பெரிதும் உதவுகின்றன.



www.TeacherTN.com

நிலவரைபடத்தினை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை

1. இயற்கை அமைப்பு வரைபடம் (Pysical Map)

2. அரசியல் வரைபடம் (Political Map)

3. கருத்துசார் வரைபடம் (Themeatic Map)

### 1. இயற்கை அமைப்பு வரைபடங்கள்

இயற்கை அமைப்பு வரைபடங்களில் பூமியின் நிலத்தோற்றங்களான மலைகள், பீடபூமிகள், ஆறுகள், கடல்கள் போன்ற இயற்கைக் கூறுகள் வரையப்பட்டுள்ளன.

எ.கா. இந்திய இயற்கை அமைப்பு வரைபடம்

### 2. அரசியல் வரைபடம்

அரசியல் வரைபடங்களில் நாடுகள், மாநிலங்கள், மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்கள், இவற்றின் எல்லைகளுடன் குறிக்கப்பட்டுள்ளன.

எ.கா. இந்திய அரசியல் வரைபடம்

### 3. கருத்துசார் வரைபடம்

ஏதேனும் ஒரு கருத்தினை மையமாகக் கொண்டு வரையப்படும் படங்கள் கருத்துசார் வரைபடம் எனப்படும்.

எ.கா. இந்தியப் போக்குவரத்து வரைபடம்

### தொடக்கநிலை வகுப்புகளில் வரைபடம் பயன்படுத்தும் முறைகள்

- வரைபடத்தில் தலைப்பு வரைபடத்திற்கு மேலேயும், திசைகள் வடகிழக்கு பகுதியிலும், குறிப்புகள் வடமேற்குப் பகுதியில் குறிக்கப்பட வேண்டும்.
- கண்டங்களையும், கடல்களையும் வெவ்வேறு வண்ணங்களில் வேறுபடுத்திக் காட்டுதல் வேண்டும்.
- கடல்சார் பயணிகள், பயண வழிகள் உலகப் புறவழி படத்தில் குறித்து காட்டலாம்.
- முக்கிய அட்ச, தீர்க்கக் கோடுகளை நிலவரைபடத்தில் உற்றுநோக்கி குறிக்கச் செய்தல் வேண்டும்.
- இந்திய வரைபடத்தில் ஆறுகளின் பெயர்களைக் குறிக்கச் செய்யலாம்.

### மதிப்பிடும் முறை

- கொடுக்கப்பட்டுள்ள இடங்களைச் சரியாகக் குறித்தல்.
- நிலவரைபடத்தில் உட்கூறுகளைச் சரியாகக் குறித்தல்.
- நிலவரைபடத்தில் சரியான வண்ணங்களை வேறுபடுத்திக் காட்டுதல்.
- அழகுணர்ச்சியோடு வண்ணங்களைத் தீட்டுதல்.
- சரியான குறியீடுகளைக் குறித்தல்.



www.TeacherTN.com

## கட்டகத்தின் உள்ளே. . . . .

இனிய நண்பர்களே,

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டை நடைமுறைப்படுத்த ஆசிரியர்கட்கு நண்பனாக இக்கட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது. முதல் பருவ புத்தகத்தில் உள்ள பாடங்களுக்கு பாடத்தில் உள்ள **வளரறி மதிப்பீடு 'அ' [FA(a)]** மற்றும் **வளரறி மதிப்பீடு 'ஆ' [FA(b)]** பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் கூடுதலாக **வளரறி மதிப்பீடு 'அ' [FA(a)]** மற்றும் **வளரறி மதிப்பீடு 'ஆ' [FA(b)]** விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு செயல்பாட்டையும் எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் எனப் படிப்படியாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் இவற்றைத் தெளிவாகப் படித்து, தன் வகுப்பிற்கும், சூழலுக்கும் ஏற்ற செயல்பாடுகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

**வளரறி மதிப்பீடு 'அ' [FA(a)]** செயல்பாட்டை ஆசிரியர்கள் வகுப்பிற்கு உள்ளே அல்லது வகுப்பிற்கு வெளியே செயல்படுத்தலாம். அதற்கான மாதிரிகள் கொடுக்கப்பட்டுள்ளன. கட்டகத்தில் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளை மாதிரியாகக் கொண்டு கற்றல் அடைவு வெளிப்படும் வகையில் புதிய செயல்பாடுகளை உருவாக்கியும் பயன்படுத்தலாம். **வளரறி மதிப்பீடு 'அ' [FA(a)]** செயல்பாடுகளை மதிப்பீடு செய்யும் வழிமுறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

தொடக்க நிலை வகுப்புகளில் குழுச் செயல்பாடுகளில் பங்கு பெறும் மாணவர்கள் அனைவருக்கும் ஒரே மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.

**3**, **4**, **5** வகுப்புகளுக்கு வினாத்தாள் திட்ட வரைவு (Blue Print) அடிப்படையில் தொகுத்தறி மதிப்பீட்ட்றகான மாதிரி வினாத்தாள் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டகத்தை ஆசிரியர்கள் முழுமையாகப் படித்து, புரிந்து பயன்படுத்த அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

–கட்டகத்தயாரிப்புக்குழு



www.TeacherTN.com

# சமூக அறிவியல் – மூன்றாம் வகுப்பு

## முதல் பருவம்

## பாடம் 1 முதல் 5 வரை

1. எனக்குப் பிடித்த உலகம்
2. எனது சுற்றுப்புறம்
3. பள்ளிக்கு வரும் வழியில்
4. திசைகளை அறிவோம்
5. பார்த்து நடக்க வேண்டும்

உள்ளே ஒவ்வொரு பாடத்திலும்

- புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ&ஆ [FA(a) &FA(b)]
- கூடுதல் வளரறி மதிப்பீடு அ&ஆ [FA(a) &FA(b)]
- நினைவில் கொள்க

<u>பாடம் 1 – எனக்குப் பிடித்த உலகம்</u>

**புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு – அ [FA(a)]**

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | மதிப்பீட்டு வழிமுறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | எனக்குப் பிடித்த உலகம் | தனி ஆள் | 208 | 10 நிமிடம் | உனக்கு என்னென்ன செய்யப் பிடிக்கும் ? | அட்டவணைப் படுத்துதல். |
| 2. | எனக்குப் பிடித்த உலகம் | தனியாள் | 209 | 10 நிமிடம் | நீ எங்கு யாருடன் வசிக்கிறாய் ? உன்னை வரைந்து எழுது. | வரைதல் தன்னைப் பற்றிக் கூறுதல். |
| 3. | எனக்குப் பிடித்த உலகம் | தனியாள் | 210 | 10 நிமிடம் | உன் வீட்டில் உள்ளவர்களின் உருவங்களை உருவாக்கு. | உருவொற்றி வரைதல். |
| 4. | எனக்குப் பிடித்த உலகம் | தனியாள் | 211 | 1 வாரம் | உன்னுடைய வீட்டில் கேட்டு விவரம் சேகரி. | புள்ளி விபரம் சேகரித்தல். |
| 5. | எனக்குப் பிடித்த உலகம் | தனியாள் | 213 | 20 நிமிடம் | உன் வீட்டின் படம் வரை. அதைச் சுற்றி உனக்குப் பிடித்தமான செடி, கொடிகள் வரைந்து அழகு செய். | கைப்படம் வரைதல் |



www.TeacherTN.com

| | |
|---|---|
| செயல் – 1 | **: அட்டவணைப்படுத்துதல்** |
| பக்கம் | **: 208** |
| கால அளவு | **: 5 நிமிடம்** |
| செயல்வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: ஒரு குழுவிலும் / குடும்பத்திலும் பொறுப்புடன் பங்கேற்றல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

✷ **வீட்டில் / சுற்றுப்புறத்தில் / பள்ளியில்** என்னும் தலைப்பின் கீழ் உள்ளவற்றில் உனக்கு என்னென்ன செய்யப்பிடிக்கும் ? என அட்டவணைப்படுத்தச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

❖ ஈடுபாடு
❖ ஆர்வம்
❖ வகைப்படுத்தும் விதம்
❖ முழுமைத்தன்மை

| | |
|---|---|
| செயல் – 2 | **: வரைதல், தன்னைப்பற்றிக் கூறுதல்** |
| பக்கம் | **: 209** |
| கால அளவு | **: 10 நிமிடம்** |
| செயல்வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: தன் குடும்ப உறுப்பினர்களை அறிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

❖ மாணவர்களைப் பாடநூலின் பக்கம் 209ல் உள்ள இடத்தில், அவர்களைப் போல ஒரு குச்சிப்படம் வரையச் செய்தல்
❖ வரைந்து, அவர்கள் எங்கு யாருடன் வசிக்கிறார்கள் என்பதை ஓரிரு வார்த்தைகளில் எழுதச் செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

❖ ஆர்வம்
❖ ஈடுபாடு
❖ செயல் நேர்த்தி
❖ கருத்து முழுமை

| | |
|---|---|
| செயல் –3 | **: உருவொற்றி வரைதல்** |
| பக்கம் | **: 210** |
| கால அளவு | **: 10 நிமிடம்** |
| செயல்வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: குடும்ப உறுப்பினர்களை அறிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

❖ மாணவர்களின் கைவிரல் ரேகைகளில் வண்ண மை தேய்க்கச் செய்தல்
❖ அதை வெள்ளைத்தாளில் பதித்தல்
❖ அதில் பாடநூலில் பக்கம் 210ல் உள்ளது போல், மாணவர்கள் வீட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உருவங்களை உருவாக்கக் கூறுதல்.

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

❖ ஆர்வம் மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் விதம் (ஓவியத்தில்)
❖ வேலையின் முழுமைத் தன்மை



www.TeacherTN.com

- ❖ தனித்துவத்தை வெளிப்படுத்துதல்
- ❖ வண்ணம் தீட்டுவதில் காட்டிய அழகுணர்வு
- ❖ பொருள்களைக் கவனத்துடன் கையாளும் விதமும், சுத்தப்படுத்தும் ஒழுங்குத் தன்மையும்

| | |
|---|---|
| செயல் –4 | **: தகவல் திரட்டுதல்** |
| பக்கம் | **: 211** |
| கால அளவு | **: 1 வாரம்** |
| செயல்வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: குடும்பத்தில் உள்ள பெரியவர்களை மதித்தல், தான் வாழ்கின்ற மக்களோடும் சூழலோடும் தன்னைத் தகவமைத்துக்கொள்ள அறிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ மாணவர்களைப் பக்கம் 211ல் உள்ள தகவல் சேகரிப்புத் தாளைப் பார்க்கச் செய்தல்
- ❖ வீட்டில் உள்ள பெரியவர்களிடம் சென்று கேட்டு அதில் உள்ள விவரங்களைத் திரட்டி வரச்செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- ❖ ஆர்வத்துடன் ஈடுபடல்
- ❖ வேலையின் முழுமைத் தன்மை
- ❖ தகவல் திரட்டும் விதம்
- ❖ திரட்டியதைப் பதிவு செய்யும் முறை

| | |
|---|---|
| செயல் –5 | **: கை வரைபடம் வரைதல்** |
| பக்கம் | **: 213** |
| கால அளவு | **: 20 நிமிடம்** |
| செயல்வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: சுற்றுச் சூழலைப் பொறுப்புணர்ச்சியுடன் கையாளுதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ மாணவர்களைப் பக்கம் 213ல் உள்ள பயிற்சித்தாளைப் பார்க்கச் செய்தல்
- ❖ அத்தாளின் நடுவில் வீடு படம் வரையக் கூறுதல். அவ்வீட்டைச் சுற்றி மாணவர்கள் வளர்க்க விரும்பும் மரம், செடி, கொடிகளை வரையச் செய்தல். அதை வண்ணமிட்டு அழகு செய்யச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- ❖ ஆர்வம்
- ❖ வேலையின் முழுமைத் தன்மை
- ❖ வண்ணங்களை கையாளும் முறை
- ❖ பாடக் கருத்துடன் செயலைத் தொடர்பு படுத்தும் விதம்

## கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– FA(a)

| | |
|---|---|
| செயல் –1 | **: குடும்பப் படத்தை (Family Tree) வரையச் செய்தல்** |
| பக்கம் | : 210 |
| கால அளவு | **: 10 நிமிடம்** |
| செயல் வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: குடும்பத்திலுள்ள உறுப்பினர்களை அறிந்து கொள்ளுதல்** |



www.TeacherTN.com

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

ஆசிரியர் மாணவர்களிடம் தத்தம் குடும்ப உறுப்பினர் படத்தையும் பெயரையும் உரிய கட்டங்களில் எழுதவும், வரையவும் செய்தல்




**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- படத்தெளிவு
- ஆர்வம்
- ஈடுபாடு
- நேர்த்தி, அழகுணர்ச்சி

| | |
|---|---|
| செயல் –2 | **: ஒப்பிடுதல், தகவல் திரட்டுதல்** |
| கால அளவு | **: 1 நாள் (வீட்டுப்பாடம்)** |
| செயல் வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: தான் வாழ்கின்ற மக்களோடும், சூழலோடும் தன்னைத் தகவமைத்துக் கொள்ள அறிதல்** |



www.TeacherTN.com

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ நடை, உடை, பாவனை, தோற்றம், சிரிப்பு போன்ற ஏதேனும் ஒன்றில் மாணவர்கள் தம் குடும்ப உறுப்பினர்கள் அல்லது மூதாதையரைப் போன்று உள்ளனரா எனக் கேட்டறிந்து வரச்செய்தல்
- ❖ அப்படி இருப்பின் யாரைப் போல் எந்த விதத்தில் என அறிந்து வரச்செய்தல்
- ❖ வீட்டில் உடன் வசிப்பவர்களுக்கும் மாணவனுக்கும் இடையேயான உறவுமுறைகளையும் எழுதி வரச் செய்தல்
- ❖ மாணவனது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் எவரிடமேனும் பாடுதல், வரைதல் போன்ற மற்ற தனிப்பட்ட திறமைகள் ஏதேனும் உள்ளனவா ?
- ❖ குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் பொழுதுபோக்குகள் என்ன ? போன்ற தகவல்களைச் சேகரித்து வரச்செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- ❖ ஆர்வத்துடன் பங்கேற்றல்
- ❖ தகவல் திரட்டுவதில் ஈடுபாடு
- ❖ தகவலுக்கான ஆதாரம்
- ❖ வேலையின் முழுமைத் தன்மை

| | |
|---|---|
| செயல் –3 | : **பாத்திரம் ஏற்று நடித்தல்** |
| பக்கம் | : **212** |
| கால அளவு | : **20 நிமிடம்** |
| செயல் வகை | : **குழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **குடும்பத்தில் மாணவரின் பங்கு, பணி மற்றும் குடும்பப் பொறுப்பு பற்றிஅறிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ✡ மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்தல்.
- ✡ ஒவ்வொரு குழுவையும் அவர்கள் வீட்டில் என்னென்ன வேலைகளைக் குடும்பத்தினருடன் பகிர்ந்து செய்கின்றனர் எனக் கலந்துரையாடச் செய்தல்.
- ✡ அதை நாடகமாக நடித்துக் காட்டக் கூறுதல்.

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- ✡ உற்சாகத்துடன் செய்யும் விதம், குரல் மற்றும் உடல் சைகைகள்
- ✡ தன் பாத்திரத்தின் மீது காட்டும் ஈடுபாடு
- ✡ குழுவாகச் செயல்படும் விதம், பொறுப்புணர்வுடன் பங்கேற்றல்
- ✡ பாடக் கருத்துடன் நாடகத்தைப் பொருத்தும் திறன்

| | |
|---|---|
| செயல் –4 | : **குழுச் செயல்பாடு** |
| பக்கம் | : **முழுப்பாடம்** |
| கால அளவு | : **10 நிமிடம்** |
| செயல்பாடு | : **பொம்மலாட்டம்** |
| கற்றல் வெளிப்பாடு | :**தான் வாழ்கின்ற மக்களோடும் சூழலோடும் தன்னைத் தகவமைத்துக்கொள்ளல்** |



www.TeacherTN.com

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

ஆசிரியர் மாணவர்களிடம் அவர்கள் வயதில் மூத்தப் பெரியவர்களைச் சந்திக்கும் போது செய்ய விரும்பும் மரியாதைச் செயல்பாடுகளைப் பொம்மலாட்டமாக நிகழ்த்தச் செய்தல். உதாரணமாக பெரியோரைச் சந்திக்கும் போது

- கை கூப்பி வணங்குதல்
- அமர்ந்திருந்தால் எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தல்
- விருந்தினரை வரவேற்றல்
- விருந்தினரை உபசரித்தல் போன்றவை

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள்:**

- தன்னம்பிக்கையுடன் இருத்தல்
- தங்குதடையின்றி பேசுதல்
- ஆர்வம், ஈடுபாடு
- பண்புகளைப் பின்பற்றுதல்
- கதாப்பாத்திரங்களைப் படைப்பதில் காட்டும் திறமை

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு – ஆ[FA(b)]

| வ.எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | மதிப்பீட்டு வழிமுறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | எனக்குப் பிடித்த உலகம் | தனியாள் | 212 | 15 நிமிடம் | நீ உன் குடும்பத்திற்கு என்னென்ன உதவிகளைச் செய்வாய் ? | படம் பார்த்துக் கூறல் |
| 2. | எனக்குப் பிடித்த உலகம் | தனியாள் | 212 | | விடுமுறை நாட்களை உன் குடும்பத்தினருடன் எவ்வாறு இனிமையாகக் கழிப்பாய் ? | சிறு தேர்வு |

**நினைவில் கொள்க**

1. மாணவர்கள் குடும்ப உறுப்பினர்களின் பெயர் மற்றும் உறவு முறைகளைத் தெரிந்துகொள்ளுதல்.
2. குடும்பத்தில் தன் பங்கு மற்றும் கூட்டுப் பொறுப்பு
3. பெரியவர்களை மதித்தல்
4. தான் வாழ்கின்ற மக்களோடும், சூழலோடும் தன்னைத் தகவமைத்துக் கொள்ளல்.



www.TeacherTN.com

# பாடம் 2 –எனது சுற்றுப்புறம்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு – அ [FA(a)]

| வ.எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | வழிமுறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | எனது சுற்றுப்புறம் | குழுச் செயல் | 216 | 20 நிமிடம் | நீ எவ்வாறு நடந்து கொண்டால் உன் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு உன்னைப்பிடிக்கும் ? | பாத்திரமேற்று நடித்தல் |
| 2. | எனது சுற்றுப்புறம் | தனியாள் | 217 | 10 நிமிடம் | வீட்டில்/அக்கம் பக்கத்தில் உள்ள முதியவர்களிடம் கேட்டு விடையை எழுதுக. | தகவல் திரட்டுதல். |
| 3. | எனது சுற்றுப்புறம் | குழுச் செயல் | 218 | 10 நிமிடம் | உன் பள்ளியில் நீங்கள் பின்பற்றும் செயல்கள் எவை ? அவற்றில் நீ பின்பற்ற வேண்டிய முக்கியமான செயல் என எதை நினைக்கிறாய் ? ஏன் ? | தன் கருத்தை வெளிப்படுத்துதல் |
| 4. | எனது சுற்றுப்புறம் | தனியாள் | 219 | 5 நிமிடம் | உன் பள்ளியில் இருந்து கற்றவை. | தன் கருத்தை வெளிப்படுத்துதல் |

செயல் –1 : **பாத்திரம் ஏற்று நடித்தல்**
பக்கம் : **216**
கால அளவு : **20 நிமிடம்**
செயல்வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **சமூக நாகரீக ஒழுங்கு நடத்தைக் குறித்து அறிதல்**

### செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :

- வகுப்பை நான்கு அல்லது ஐந்து குழுக்களாக (வகுப்பின் எண்ணிக்கைக்கு ஏற்பப் பிரித்தல்)
- பாட நூலில் பக்கம் 216ல் உள்ள படங்களை மாணவர்களைப் பார்க்கச்செய்தல்
- குழுவில் மாணவர்களை அவர்களது அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் பழகும் முறைகளையும் செய்யும் உதவிகளையும் கலந்துரையாடச் செய்தல்
- அதை வகுப்பில் நாடகமாக நடித்துக்காட்டச் செய்தல்

### மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:

- தன்னம்பிக்கையுடன் இருத்தல்
- தங்குதடையின்றி பேசுதல்
- ஆர்வத்துடன் ஈடுபடுதல்
- குரல் ஏற்றத்தாழ்வு
- பாத்திரம் அறிந்து நடித்தல்

செயல் –2 : **தன் கருத்தை வெளிப்படுத்துதல் (கருத்துப் பொழிவு) Brain storming**
பக்கம் : **218**
கால அளவு : **10 நிமிடம்**
செயல்வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **வகுப்பறை நன்னடத்தையை அறிதல்**

### செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்தல்
- ஒவ்வொரு குழுவையும் ‘உங்கள் பள்ளியில் நீங்கள் பின்பற்றும் செயல்கள் எவை ? அவற்றில் முக்கியமான செயல் என எதை நினைக்கிறாய் ? ஏன் ?’ எனக் கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடச் செய்தல்
- குழுவில் மாணவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் அனைத்தையும் குழுத் தலைவரைத் தொகுத்து கூறச்செய்தல்



www.TeacherTN.com

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- ❖ குழுவில் பங்களிப்பு
- ❖ ஆர்வத்துடன் ஈடுபடுதல்
- ❖ தலைப்பைத் தொடர்புபடுத்திப் பேசுதல்
- ❖ பிறர் கருத்தை மதித்தல்
- ❖ பொறுப்புணர்ந்து செயல்படுதல்

## கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– FA(a)

| | |
|---|---|
| செயல்–1 | **: புனை பாவம் (Miming)** |
| பக்கம் | **: 219** |
| கால அளவு | **: 10 நிமிடம்** |
| செயல் வகை | **: குழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: தூய்மையான பழக்க வழக்கங்களை அறிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ ஆசிரியர் வகுப்பை இரண்டு குழுக்களாகப் பிரித்தல்
- ❖ முதல் குழு மாணவர்களிடம் தங்களுக்குத் தெரிந்த தூய்மையான பழக்க வழக்கங்கள் என்னென்ன என்பதைப் புனைபாவம் (Miming) மூலம் விளக்கச்செய்தல்
- ❖ இரண்டாம் குழுவை அப்பாவனை உணர்த்தும் செய்தியைக் கூறச்செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ மாணவர்களின் ஆர்வம், ஈடுபாடு
- ❖ நற்பண்புகளைப் பின்பற்றுதல்
- ❖ குழுப் பங்களிப்பு
- ❖ உணர்வுகளை வெளிப்படுத்தும் திறன்
- ❖ சூழலுக்கேற்ப முடிவெடுத்தல்

| | |
|---|---|
| செயல்–2 | **: செயல் திட்டம்** |
| பக்கம் | **: முழுப்பாடம்** |
| கால அளவு | **: 1 வாரம்** |
| செயல் வகை | **: குழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: வகுப்பறை நன்னடத்தை மற்றும் தன் பங்கு, கூட்டுப் பொறுப்பு அறிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ ஆசிரியர் வகுப்பை மூன்று குழுக்களாகப் பிரித்தல்
- ❖ ஒவ்வொரு குழுவையும், உங்கள் கனவுப் பள்ளி எவ்வாறு இருக்க வேண்டுமென நினைக்கிறீர்கள் ? எனக் கேட்டு குழுவில் கலந்துரையாடச் செய்தல்
- ❖ பின்னர் முதல் குழுவை கனவுப் பள்ளி என்னும் தலைப்பில் உருமாதிரி செய்யச் செய்தல்
- ❖ இரண்டாம் குழுவை அவர்கள் கனவுப் பள்ளியை வண்ணமயமாக வரையச்செய்தல்
- ❖ மூன்றாம் குழுவை தங்கள் கனவுப் பள்ளியில் என்னென்ன தேவையென நினைக்கிறார்களோ அவற்றைச் செய்தித்தாள் அல்லது வார மாத இதழ்களில் இருந்து படங்களாக வெட்டி ஒட்டி படத்தொகுப்பு தயாரிக்கச்செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ மாணவர் ஆர்வம், ஈடுபாடு
- ❖ படைப்பாற்றல் திறன்
- ❖ குழுப் பங்களிப்பு



www.TeacherTN.com

❖ வடிவமைப்பு

❖ பொருள்களைக் கையாளும் திறன்

செயல்–3 : **கலந்துரையாடல்**
பக்கம் : **முழுப்பாடம்**
கால அளவு : **20 நிமிடம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **சமூக நாகரிக ஒழுங்கு குறித்து அறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

❖ ஆசிரியர் வகுப்பை ஐந்து குழுக்களாகப் பிரித்தல்

❖ உங்கள் பள்ளி விளையாட்டு மைதானத்தில் இரண்டு மாணவர்கள் சண்டையிட்டுக் கொள்கின்றனர். அதை பார்க்கும் நீங்கள் என்ன செய்வீர்கள் ? எனக் கேள்வி கேட்டு குழுவில் கலந்துரையாடச் செய்தல்

❖ குழுத் தலைவர், குழுவின் கருத்துக்களைத் தொகுத்துக் கூறச்செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

❖ மாணவர் ஆர்வம், ஈடுபாடு

❖ கருத்தை வெளிப்படுத்தும் திறன்

❖ குழுப் பங்களிப்பு

❖ பிறர் கருத்துக்கு மதிப்பளித்தல்

❖ செயலைப் பாடத்துடன் தொடர்புபடுத்தும் திறன்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ [FA(b)]

| வ.எண் | பாடத்தலைப்பு | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | மதிப்பீட்டு வழிமுறைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | எனது சுற்றுப்புறம் | 214 | | லதாவின் தோழிகள் யார் ? யார் ? | சிறு தேர்வு |
| 2. | எனது சுற்றுப்புறம் | 216 | 15 நிமிடம் | படத்தைப்பார். நீ எவ்வாறு நடந்து கொண்டால், உன் அக்கம், பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு உன்னைப் பிடிக்கும் ? | சிறு தேர்வு |
| 3. | எனது சுற்றுப்புறம் | 219 | | நிரப்புக. | சிறு தேர்வு |

## கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு ஆ– FA(b)

**தேர்ந்தெடுத்து எழுது.**

விளையாட்டுத் திடல், கோயில், பால்வாடி, மசூதி, உயர்நிலைப்பள்ளி, தேவாலயம், தோப்பு, தோட்டம், வீடுகள், மரம் , மேல்நிலைநீர்த்தொட்டி, கடைவீதி, சந்தை, கிணறு, ஆறு, பேருந்து நிறுத்தம், மருந்துக்கடை, உணவகம், குளம், தேநீர் விடுதி.






www.TeacherTN.com

**நினைவில் கொள்க**

1. தன் குடும்பத்திலும், பள்ளியிலும் சுற்றுப்புறத்திலும் பிறரை மதித்து நடக்கும் நல்ல பழக்க வழக்கங்ககளை அறிதல்
2. சுற்றுச்சூழலைப் பொறுப்புணர்ச்சியுடன் கையாளுதல்
3. தூய்மையான பழக்க வழக்கங்கள், நன்னடத்தை , சமூக நாகரிக ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுதல்

## பாடம் 3 – பள்ளிக்கு வரும் வழியில்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ [FA(a)]

| வ.எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | மதிப்பீட்டு வழிமுறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பள்ளிக்கு வரும் வழியில் | தனியாள் | 221 | 5 நிமிடம் | நீ பள்ளிக்கு வரும் வழியில் காணும் ஒரு காட்சியைப் படமாக வரைக | கை வரைபடம் வரைதல் |
| 2. | பள்ளிக்கு வரும் வழியில் | முழு வகுப்பு | 224 | 10 நிமிடம் | கண்ணாடி முன்னாடி | விளையாட்டு |
| 3. | பள்ளிக்கு வரும் வழியில் | தனியாள் | 228 | 5 நிமிடம் | நீ பள்ளிக்கு வரும் பொழுது பார்ப்பவை எவை ? தினமும் உன்னுடன் சேர்ந்து பள்ளிக்கு வருபவர்கள் யார் ? | தகவல் சேகரித்தல் திறன் |
| 4. | பள்ளிக்கு வரும் வழியில் | தனியாள் | 229 | 1வாரம் | 1.உன் பள்ளியில் படிக்கும் நண்பர்கள் யாரேனும் உன் வீட்டிற்கு அருகில் உள்ளார்களா ? எனக் கேட்டு பெயர்களை எழுதுக. | தகவல் சேகரித்தல் திறன் |
| | | | | | 2.பள்ளிக்குச் செல்லும் பொழுது நீ பார்த்த மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்றைக் கூறுக. | |
| | | | | | 3.உன் ஊரில் உள்ள நீர்நிலைகளை √ செய். | |
| | | | | | 4.வீட்டிற்கு வெளியில் செல்லும் பொழுது வானிலையைக் கவனித்து இருக்கிறாயா ? இன்று வானிலை எவ்வாறு இருந்தது √ செய். | |
| | | | | | 5.பள்ளி செல்லும் வழியில் என்னென்ன தொழில் செய்பவர்களை நீ பார்க்கிறாய் ? | |
| 5. | பள்ளிக்கு வரும் வழியில் | தனியாள் | 230 | 5 நிமிடம் | நீ வழியில் பார்க்கும் காட்சிகளைப் பட்டியல் இடு. | அட்டவணைப் படுத்துதல் |
| 6. | பள்ளிக்கு வரும் வழியில் | குழு | 230 | 15 நிமிடம் | யோசி! யோசி! செய் | அடையாளக் குறியீடுகளை உருவாக்குதல் |



www.TeacherTN.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7. | பள்ளிக்கு வரும் வழியில் | தனியாள் | 231 | 15 நிமிடம் | வரைபடத்தை வரையலாமா ? | வரைபடம் வரைதல் |
| 8. | பள்ளிக்கு வரும் வழியில் | குழு | 224 | 15 நிமிடம் | இது போல உனக்குப் பிடித்த வகையில் உன் வீட்டிற்கு வழி கூற முயன்று பார். | தன் கருத்தை வெளியிடுதல் |

செயல்–1 : **படம் வரைதல்**

பக்கம் : **221**

கால அளவு : **2 நாட்கள்**

செயல் வகை : **தனியாள் செயல்பாடு**

கற்றல் வெளிப்பாடு : **பள்ளிக்குச் செல்கின்ற பாதையை அறிதல், செல்லும் வழியில் அன்றாடம் காண்கின்ற காட்சிகளைப் பதிவு செய்தல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

- ❖ மாணவர்களை அவர்கள் பள்ளிக்கு வரும் வழியில் கண்ட ஒரு காட்சியைப் படமாக வரையச் செய்தல்
- ❖ வரைந்த படம் மற்றும் அன்றாடம் தான் காணும் காட்சிகளைப் போல் செய்தித்தாள், வார மாத இதழ்களில் வெளிவந்த படங்கள் இருப்பின் அவற்றைச் சேகரித்து சிறு படத்தொகுப்பு தயாரிக்கச் செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

- ❖ மாணவர்களின் ஆர்வம், ஈடுபாடு
- ❖ படைப்பாற்றல்
- ❖ கற்பனைத்திறன்
- ❖ செயல்பாட்டில் முழுமை
- ❖ செயல் ஒழுங்கு

செயல்–2 : **செய்தறிதல் விளையாட்டு**

பக்கம் : **224**

கால அளவு : **20 நிமிடம்**

செயல் வகை : **முழு வகுப்புச் செயல்பாடு**

கற்றல் வெளிப்பாடு : **வலப்பக்கம் மற்றும் இடப்பக்கங்களை அறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்தல்
- ❖ இரு குழுவையும் ஒருவரை ஒருவர் பார்க்கும் வகையில் நேருக்கு நேராக நிற்கச் செய்தல்
- ❖ ஒரு குழுவிற்கு செயல்படும் குழு என்றும் மற்றொரு குழுவிற்கு கண்ணாடிக்குழு என்றும் பெயர் இடுதல்
- ❖ செயல்படும் குழு செய்யும் செயலை, கண்ணாடிக்குழு முகம் பார்க்கும் கண்ணாடி போல் அப்படியே செய்யச்செய்தல் (பார்க்க பாடநூல் பக்கம் 224) உதாரணம்; செயல்படும் குழு வலது கை தூக்கினால் கண்ணாடிக் குழு இடது கையை தூக்குதல்



www.TeacherTN.com

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

- ❖ மாணவர்களின் ஈடுபாடு
- ❖ குழு மனப்பான்மை
- ❖ விதிமுறைகளைப் பின்பற்றுவதில் ஆர்வம்
- ❖ பாடக் கருத்துடன் தொடர்பு படுத்துதல்

| | |
|---|---|
| செயல்–3 | : **தகவல் திரட்டுதல் (வீட்டுப்பாடம்)** |
| பக்கம் | : **228,229** |
| கால அளவு | : **2 நாட்கள்** |
| செயல் வகை | : **தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **பள்ளிக்குச் செல்கின்ற பாதையை அறிதல், செல்லும் வழியில் அன்றாடம் காண்கின்ற காட்சிகள் கால நிலை, மரங்கள் போன்றவற்றை அறிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

- ❖ பாடநூலில் பக்கம் 228,229 மற்றும் 230ல் உள்ள பயிற்சித்தாள்களைப் பார்த்து தகவல் திரட்டச் செய்தல்
- ❖ திரட்டிய தகவல்களைப் பயிற்சித்தாளில் பூர்த்திசெய்து வரச் செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ மாணவர்களின் ஈடுபாடு
- ❖ செயல் முழுமை
- ❖ குறித்த நேரத்தில் ஒப்படைத்தல்
- ❖ சேகரித்த தகவல்களின் தன்மை
- ❖ செயல் நேர்த்தி

| | |
|---|---|
| செயல்–4 | : **வகைப்படுத்துதல்** |
| பக்கம் | : **230** |
| கால அளவு | : **15 நிமிடம்** |
| செயல் வகை | : **தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **பள்ளிக்குச் செல்கின்ற பாதையை அறிதல், செல்லும் வழியில் அன்றாடம் காண்கின்ற காட்சிகளை உற்றுக் கவனித்தல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

- ❖ பாடநூலில் பக்கம் 230ல் உள்ள அட்டவணையை மாணவர்களிடம் அளித்தல்
- ❖ பள்ளி வரும் வழியில் மாணவர்கள் அன்றாடம் பார்க்கும் காட்சிகளை தொகுக்கச்செய்தல்
- ❖ தொகுத்த தகவல்களை புத்தகத்தில் உள்ள அட்டவணையில் வகைப்படுத்தச் செய்தல்



www.TeacherTN.com

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

- ❖ மாணவர்களின் ஈடுபாடு
- ❖ செயல் முழுமை
- ❖ குறித்த நேரத்தில் ஒப்படைத்தல்
- ❖ சேகரித்த தகவல்களின் தன்மை
- ❖ செயல் நேர்த்தி

| | |
|---|---|
| செயல்–5 | **: அடையாளக்குறியீடுகளை உருவாக்குதல்** |
| பக்கம் | **: 230** |
| கால அளவு | **: 20 நிமிடம்** |
| செயல் வகை | **: குழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: பள்ளிக்குச் செல்கின்ற பாதையை அறிதல் மற்றும் வரைபடத்தின் அடிப்படை கூறுகளைத் தெரிந்து கொள்ளுதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

- ❖ மாணவர்களை 4 அல்லது 5 நபர்கள் கொண்ட சிறுகுழுக்களாகப் பிரித்தல்
- ❖ குழுவில் மாணவர்கள் பள்ளிவரும் வழியில் பார்த்த முக்கிய இடங்களைப் பட்டியலிடச் செய்தல்
- ❖ குழுவில் பட்டியலிட்ட இடங்களுக்கான அடையாளக்குறியீடுகளை உருவாக்கச்செய்தல்
- ❖ ஒவ்வொரு குழுவும் உருவாக்கிய அடையாளக்குறியீடுகளை வகுப்பறைப் பார்வைக்கு வைக்கச் செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ மாணவர்களின் ஈடுபாடு
- ❖ படைப்பாற்றல் திறன்
- ❖ பாடத்துடன் தொடர்பு படுத்தும் திறன்
- ❖ குறியீடுகளை உருவாக்கிய விதம்
- ❖ செயல் நேர்த்தி

| | |
|---|---|
| செயல்–6 | **: கை வரைபடம் வரைதல்** |
| பக்கம் | **: 231** |
| கால அளவு | **: 20 நிமிடம்** |
| செயல் வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **:பள்ளிக்குச் செல்கின்ற பாதையை அறிதல் மற்றும் வரைபடத்தின் அடிப்படைகளைத் தெரிந்து கொள்ளுதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

- ❖ மாணவர்களை பாடநூலில் பக்கம் 231ல் உள்ள பயிற்சித்தாளைப் பார்க்கச்செய்தல்
- ❖ அதில் மாணவர்களது வீட்டில் இருந்து பள்ளிக்குச் செல்லும் வழியை இட அடையாளக் குறியீடுகளுடன் வரையச் செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

- ❖ மாணவர்களின் ஆர்வம்
- ❖ செயல் நேர்த்தி
- ❖ செயலின் முழுமை
- ❖ படைப்பாற்றல் திறன்
- ❖ இடத்திற்கு ஏற்ப குறியீடுகளைப் பொருத்துதல்



www.TeacherTN.com

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ [FA(b)]

| வ.எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | வழிமுறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பள்ளிக்கு வரும் வழியில் | தனியாள் | 223 | 15 நிமிடம் | உனக்கு உன் வீட்டின் முகவரி தெரியுமா ? எழுது. | சிறு தேர்வு |
| 2. | பள்ளிக்கு வரும் வழியில் | | 225 | | பள்ளியின் முகவரி எழுது | |
| 3. | பள்ளிக்கு வரும் வழியில் | | 226 | | கலை, மேகலா, ஆயிஷா பள்ளி செல்லும் வழியில் பார்த்தவற்றைப் பட்டியலிடு. | |
| 4. | பள்ளிக்கு வரும் வழியில் | | 227<br>228 | | வரைபடத்தைப் பார்த்து விடையளி | |

**பக்கம் 225, 226**

- ◆ பாட நூலில் பக்கம் 225ல் உள்ள கலை, மேகலா பள்ளி சென்ற நிகழ்ச்சியைப் படித்து அவர்கள் செல்லும் வழியில் பார்த்தவற்றை மாணவர்களைப் பட்டியலிடச் செய்தல்

**பக்கம் 227, 228**

- ◆ பாட நூலில் பக்கம் 227ல் உள்ள கனியின் வரைபடத்தைப் பார்த்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு பாடநூலில் பக்கம் 228 ல் உள்ள பயிற்சித்தாளில் விடையளிக்கச் செய்தல்

**பக்கம் 223, 225**

- ◆ மாணவர்களை வீடு, பள்ளி முகவரி எழுதச்செய்தல்
- ◆ வெளியூர் சென்று விட்ட உன் ஆசிரியர் உனக்கு கடிதம் எழுத நினைக்கிறார். எனவே, உன் வீடு மற்றும் பள்ளி முகவரியை எழுது.

வீட்டு முகவரி

பெயர் :

தந்தை பெயர் :

வீட்டு எண் :

தெருவின் பெயர்:

ஊர் : மாவட்டம் :

அ.கு.எண் :

பள்ளி முகவரி

பெயர் :

பள்ளியின் பெயர் :

தெருவின் பெயர் :

ஊர் : மாவட்டம் :

அ.கு.எண் :

www.TeacherTN.com

**நினைவில் கொள்க**

1. பள்ளி செல்லும் வழியில் அன்றாடம் காண்கின்ற காட்சிகளை நினைவில் இருத்தல்
2. தன் வீடு, பள்ளியின் வலப்பக்கம், இடப்பக்கம் உள்ள இடங்கள் மற்றும் பொருட்கள் பற்றி அறிதல்
3. ஊரில் உள்ள பொது இடங்கள் மற்றும் இட அடையாளங்களை நினைவில் கொள்ளல்
4. அடையாளக் குறியீடுகள் உருவாக்குதல்
5. வரைபடத்தின் அடிப்படைக் கூறுகளை நினைவில் இருத்தல்

## பாடம் 4 – திசைகளை அறிவோம்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு – அ [FA(a)]

| வ.எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | மதிப்பீட்டு வழிமுறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திசைகளை அறிவோம் | முழு வகுப்பு | 233 | 30 நிமிடம் | ஒரு விளையாட்டு விளையாடலாமா ? | விளையாட்டு |
| 2. | திசைகளை அறிவோம் | முழு வகுப்பு | 234 | 15 நிமிடம் | பாடல் – திசைகள் பாடல் பாடச் செய்தல். | பாட்டு |
| 3. | திசைகளை அறிவோம் | தனியாள் | 237 240 | 30 நிமிடம் | வரைபடத்தில் பறவைகள் தேடிய நீர் நிலைகளையும் அதன் திசைகளையும் கண்டுபிடித்து வரைக. | வரைபடம் வரைதல் |
| 4. | திசைகளை அறிவோம் | குழுச் செயல் | 232 | 10 நிமிடம் | கவிதா வீடு எது ? மலர் வீடு எது ? கண்டுபிடி | படப்புதிர் |

செயல்–1 : **படப் புதிர்**
பக்கம் : **232**
கால அளவு : **10 நிமிடம்**
செயல் வகை : **சிறு குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **இடது வலது அறிந்து கொள்ளுதல் , வரைபடங்களைத் தயாரித்தல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- வகுப்பை 1, 2, 3, 4, 5 எனக்கூறச்செய்தல்
- ஒன்று அனைத்தும் ஒரு குழு, இரண்டு அனைத்தும் ஒரு குழு என ஐந்து குழுக்களாகப் பிரித்தல்
- பாடநூலில் 232 ஆம் பக்கத்தில் உள்ள படத்தைப் பார்த்து அதில் உள்ள குறிப்பைப் படித்து அந்தப் புதிருக்கான விடையைக் கண்டறியச்செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள் :**

- மாணவர்களின் ஆர்வம்
- பங்களிப்பு
- குழு மனப்பான்மை
- பாடப்பொருள் தொடர்பு

செயல்–2 : **செய்தறிதல் (விளையாட்டு)**
பக்கம் : **233**
கால அளவு : **30 நிமிடம்**
செயல் வகை : **முழு வகுப்புச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **இடது வலது அறிந்து கொள்ளுதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

- வகுப்பறையில் மாணவர்களை எழுந்து நிற்கச்செய்தல்
- பாடநூலில் பக்கம் 233 ல் உள்ள இடப்பக்கம் திரும்பு விளையாட்டை விளையாடச்செய்தல்



www.TeacherTN.com

- ❖ மாணவர்கள் ஒவ்வொருமுறை இடதுபுறம் திரும்பும் பொழுதும் பார்க்கும் பொருள் அல்லது நபர்களை உற்று நோக்கி நினைவில் கொள்ளச் செய்தல்
- ❖ பின்னர் பாடநூலில் பக்கம் 233ல் அதற்குரிய இடத்தில் எழுதச் செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

- ❖ மாணவர்களின் ஆர்வம்
- ❖ ஈடுபாடு
- ❖ குழு மனப்பான்மை
- ❖ விதிமுறைகளை கடைபிடித்தல்

| | |
|---|---|
| செயல்–3 | : **வரைபடம் வரைதல்** |
| பக்கம் | : **238, 239, 240** |
| கால அளவு | : **30 நிமிடம்** |
| செயல் வகை | : **தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **நான்கு முக்கிய திசைகளை அறிதல், எளிய வரைபடம் வரைதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ பாடநூலில் 238, 239 ஆம் பக்கத்தில் உள்ள 'வாழிடம் தேடி' கதையை மாணவர்களை படிக்கச் செய்தல்
- ❖ பின்னர் 240 ஆம் பக்கத்தில் வரைபடம் வரைவதற்கு கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் மாணவர்களை வரையச்செய்தல்
- ❖ பறவைகள் தேடிய நீர் நிலைகளையும் அந்த திசைகளையும் கண்டறிந்து வரையச்செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள்:**

- ❖ மாணவர்களின் ஆர்வம்
- ❖ திசை அறிவு
- ❖ வரைபட நேர்த்தி

## கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– FA(a)

| | |
|---|---|
| செயல்–1 | : **பாடல்** |
| பக்க எண் | : **232** |
| கால அளவு | : **15 நிமிடம்** |
| செயல் வகை | : **முழு வகுப்புச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **நான்கு முக்கிய திசைகளை அறிதல், எளிய வரைபடம் வரைதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

லாலா, லாலா, லாலலலா
பள்ளிக்கு வடக்கே கடை இருக்கு
கடையிலே வெங்காய வடை இருக்கு
பள்ளிக்குத் தெற்கே தேர் இருக்கு
தேருக்குச் சக்கரம் இரண்டிருக்கு
பள்ளிக்குக் கிழக்கே பார்க் இருக்கு
பார்க்கிலே விளையாட இடம் இருக்கு
பள்ளிக்கு மேற்கே மலை இருக்கு
மலையிலே நிறைய மரமிருக்கு
லாலா, லாலா, லாலலலா . . .

- மாணவர்களை அபிநயத்துடன் இப்பாடலைப் பாடச் செய்தல்
- ஆசிரியர் பின்வரும் வினாக்களைக் கேட்டல்
- பள்ளிக்கு வடக்கில் என்ன உள்ளது ?
- பள்ளிக்கு மேற்கில் என்ன உள்ளது ?
- தேர், பள்ளிக்கு எந்தத் திசையில் உள்ளது ?
- பள்ளிக்கு எந்தத் திசையில் பார்க் உள்ளது ?



www.TeacherTN.com

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- ❖ மாணவர்களின் ஆர்வம்
- ❖ திசை அறிவு
- ❖ குரல் ஏற்றத்தாழ்வுடன் பாடுதல்
- ❖ பங்கேற்பு

செயல்–2 : **விளையாட்டு (புதையல் வேட்டை)**
பக்க எண் : **232**
கால அளவு : **30 நிமிடம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **நான்கு முக்கிய திசைகளை அறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ வகுப்பை நான்கு குழுக்களாகப் பிரித்தல்
- ❖ ஆசிரியர் வகுப்பிற்கு வெளியே நான்கு திசைகளையும் குறித்தல்
- ❖ அந்த நான்கு திசைகளில் ஒவ்வொன்றிலும் பென்சில், பேனா, அளவுகோல், டப்பா போன்ற பொருள்களை ஒளித்து வைத்தல்
- ❖ ஆசிரியர் திசையையும் சில இட அடையாளங்களையும் கூறி மாணவர்களை அப்பொருள்களைக் கண்டறியச்செய்தல்
- ❖ பின்னர் மாணவர்கள் கண்டறிந்த பொருள்கள் எந்தெந்த திசைகளில் இருந்தது என்று கூறச்செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- ❖ மாணவர்களின் ஆர்வம்
- ❖ திசை அறிவு
- ❖ மகிழ்வுடன் பங்கேற்றல்
- ❖ விதிகளை மதித்தல்
- ❖ குழு மனப்பான்மை

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ [FA(b)]

| வ.எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | வழிமுறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திசைகளை அறிவோம் | தனியாள் | 235 | 15 நிமிடம் | அப்புவுக்கு திசையைக் கூறு | சிறு தேர்வு |
| 2. | திசைகளை அறிவோம் | | 236 | | கவிதா வீடு சாலைக்கு........ திசையில் உள்ளது. மலர் வீடு சாலைக்கு........ திசையில் உள்ளது. | சிறு தேர்வு |
| 3. | திசைகளை அறிவோம் | | 237 | | குறிப்பைப் படித்துப் பெயர்ப் பலகையை எழுது. | சிறு தேர்வு |
| 4. | திசைகளை அறிவோம் | | 240 | | பக்கம் 21ல் இருக்கும் படத்தைப் பார். | சிறு தேர்வு |

செயல்–1 : **வாய்மொழித் தேர்வு**
கால அளவு : **10 நிமிடம்**
செயல் வகை : **தனியாள் செயல்பாடு**
கற்றல் வெளிபாடு : **வகுப்பறையில் உள்ளவற்றை எந்த திசையில் உள்ளது என அறிதல்**



www.TeacherTN.com

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

மாணவர்களை கரும்பலகை, ஜன்னல் மற்றும் கதவு எந்த திசையில் உள்ளது எனக் கூறச்செய்தல்.

| | |
|---|---|
| செயல்–2 | **: தகவல் சேகரித்தல்** |
| கால அளவு | **: 10 நிமிடம்** |
| கற்றல் வெளிபாடு | **: ஊரில் உள்ள திசைகளை அறிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

மாணவர்களிடம் உனது வீட்டுக்கருகில்/ஊருக்கருகில் உள்ள கோயில் மற்றும் தண்ணீர்த் தொட்டி ஆகியவைகளின் திசைகளை அறிந்து வரச்செய்தல்.

| | |
|---|---|
| செயல்–3 | **: கண்டறிதல்** |
| கால அளவு | **: 10 நிமிடம்** |
| கற்றல் வெளிபாடு | **: பள்ளியில் உள்ள திசைகளை அறிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

பள்ளியில் உள்ள மற்ற வகுப்பறைகள் மற்றும் கொடிக்கம்பம் உள்ள திசை எது என கண்டறியச் செய்தல்.

| | |
|---|---|
| செயல்–4 | **: ஓவியம் வரைதல்** |
| கால அளவு | **: 10 நிமிடம்** |
| கற்றல் வெளிபாடு | **: திசை காட்டும் கருவி** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

மாணவர்களைத் திசைகாட்டும் கருவியை வரைந்து வண்ணம் தீட்டச் செய்தல்.

| | |
|---|---|
| செயல்–5 | **: திசைகளைக் குறித்தல்** |
| பக்கம் | **: 236** |
| கால அளவு | **: 10 நிமிடம்** |
| கற்றல் வெளிபாடு | **: திசைகளை அடையாளம் காணுதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- பாடநூலில் பக்கம் 236 ல் உள்ள வரை படத்தைப் பார்த்து, திசைகளை அறியச் செய்தல்
- வரைபடத்தில் கவிதாவின் வீடு எந்தத் திசையில் உள்ளது ? மலர் வீடு எந்தத் திசையில் உள்ளது ? எனக் கண்டறிந்து குறிக்கச் செய்தல்

| | |
|---|---|
| செயல்–6 | **: எழுதுதல்** |
| பக்கம் | **: 237** |
| கால அளவு | **: 10 நிமிடம்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- பாடநூலில் பக்கம் 237 ல் உள்ள பயிற்சித் தாளைப் பார்க்கச் செய்தல்
- படத்தில் உள்ள வீட்டின் மேல் விரலை வைக்கச் செய்தல்
- பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிற்கேற்ப விரலை நகர்த்தி விடையைக் கண்டறிந்து எழுதத் செய்தல்



www.TeacherTN.com

**நினைவில் கொள்க**

1. சூரியனை அடிப்படையாகக் கொண்டு நான்கு முக்கிய திசைகளை அறிதல்
2. வரைபடத்தில் திசைகளைக் குறித்தல்

## பாடம் 5 –பார்த்து நடக்க வேண்டும்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு –அ [FA(a)] இல்லை

## கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– [FA(a)]

| | |
|---|---|
| செயல்–1 | : விளையாட்டு |
| பக்கம் | : 245 |
| கால அளவு | : 15 நிமிடம் |
| செயல் வகை | : முழு வகுப்புச் செயல்பாடு |
| கற்றல் வெளிப்பாடு | : பாதுகாப்பு விதிகளை அறிந்து கொள்ளுதலும், சாலையில் எச்சரிக்கையாகச் சென்று வர அறிந்திருத்தல் |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

- மாணவர்களை விளையாட்டு மைதானத்தில் நிற்கச் செய்தல்
- அவர்களை வட்டத்தில் ஓடச் செய்தல்
- ஆசிரியர் சிவப்பு, மஞ்சள், பச்சை வண்ண வட்ட அட்டைகளைத் தயாரித்து கையில் வைத்திருத்தல்
- ஆசிரியர் சிவப்பு வண்ண அட்டையைக் காட்டினால் மாணவர்கள் நிற்க வேண்டும்
  மஞ்சள் வண்ண அட்டையைக் காட்டினால் மெதுவாக நடக்க வேண்டும்
  பச்சை வண்ண அட்டையைக் காட்டினால் ஓட வேண்டும். இவ்வாறு விளையாடச் செய்து மதிப்பீடு செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- மாணவர்களின் ஆர்வம்
- மகிழ்ச்சியுடன் பங்களிப்பு
- ஈடுபாடு
- சாலை விதிகளை அறிதல்

| | |
|---|---|
| செயல்–2 | : இட மாதிரி உருவாக்குதல் (சிறுவர் போக்குவரத்துப்பூங்கா) |
| பக்கம் | : முழு பாடம் |
| கால அளவு | : 15 நிமிடம் |
| செயல் வகை | : குழுச் செயல்பாடு |
| கற்றல் வெளிப்பாடு | : சாலை விதிகளை அறிதலும் பாதுகாப்பாக நடத்தலும் |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்தல்
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு வேலையைப் பிரித்துக் கொடுத்தல்
- உதாரணமாக – சாலை அமைத்தல், குறியீடு தயாரித்தல், சாலைகளில் வேகத்தடை அமைத்தல், வாகனங்கள் சேகரித்தல்
- அனைத்து குழுக்களும் தங்களின் பங்கை முடித்துப் போக்குவரத்துப் பூங்கா உருவாக்குதல்

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- ஈடுபாட்டுடன் செய்தல்
- குழு மனப்பான்மை



www.TeacherTN.com

- சாலை விதிகளை அறிதல்
- குறியீடுகள் குறித்த அறிவு

| | |
|---|---|
| செயல்–3 | : **வரைதல், விளையாட்டு** |
| பக்கம் | : **246, 247** |
| கால அளவு | : **15 நிமிடம்** |
| செயல் வகை | : **முழு வகுப்புச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **சாலை விதிகளை அறிதலும் பாதுகாப்பாக நடத்தலும்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்தல்
- வகுப்பில் எச்சரிக்கை குறியீட்டிற்கான வாசகங்களை எழுதிய 9 அட்டைப் பெட்டிகளை வைத்தல்
- ஒவ்வொரு குழுவையும் அவர்களுக்கென்று ஒரு வண்ணத்தைத் தேர்ந்தெடுக்கச் செய்தல்
- அக்குழுவிற்கான வண்ணத்தில் மட்டுமே அக்குழுவை குறியீடுகளை வரையச் செய்தல்
- வரைந்த குறியீடுகளை அதற்குரிய பெட்டிகளில் சரியாக போடச் செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள் :**

- ஆர்வம்
- குழு மனப்பான்மை
- முழுமை
- பங்களிப்பு
- சரியான குறியீடுகளை பொருத்துதல்

| | |
|---|---|
| செயல்–4 | : **உரு மாதிரி செய்தல் (எச்சரிக்கை விளக்கு தயாரித்தல்)** |
| பக்கம் | : **245** |
| கால அளவு | : **15 நிமிடம்** |
| செயல் வகை | : **குழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **சாலை விதிகளை அறிதல், பாதுகாப்பாக நடத்தல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**



- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்
- குழுக்களை வாகனங்களுக்கான எச்சரிக்கை விளக்கைத் தயாரிக்கச் செய்தல்
- ஒரு சிறிய செவ்வக வடிவ அட்டைப்பெட்டியை எடுத்துக் கொள்ளச்செய்தல்
- அப்பெட்டியின் ஒரு பகுதியில் ஒரே அளவிலான மூன்று வட்ட வடிவ வெள்ளைத்தாளை ஒட்டச் செய்தல்
- அந்த வெள்ளைத்தாளை எச்சரிக்கை விளக்குகளின் வண்ணமிட்டு மாதிரியை உருவாக்குதல்

**மதிப்பீட்டிற்கான வழி முறைகள்**

- ஆர்வம்
- பங்களிப்பு
- வண்ணங்கள்
- நேர்த்தி
- பாடப்பொருள்



www.TeacherTN.com

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு – ஆ [FA(b)]

| வ.எண் | பாடத்தலைப்பு | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | மதிப்பீட்டு வழிமுறைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | பார்த்து நடக்க வேண்டும் | 244 | 10 நிமிடம் | மாணவர்கள் என்ன விடை கூறியிருப்பர் ? | சிறு தேர்வு |
| 2. | பார்த்து நடக்க வேண்டும் | 247 | 5 நிமிடம் | ஓட்டுநர் ஏன் சத்தம் இடுகிறார் ? | சிறு தேர்வு |
| 3. | பார்த்து நடக்க வேண்டும் | 248 | 10 நிமிடம் | எது சரி ? எது தவறு குறி. தவறு எனில் ஏன் எனக் கூறு ? | சிறு தேர்வு |
| 4. | பார்த்து நடக்க வேண்டும் | 250 | 10 நிமிடம் | எந்தக் குறியீடு எந்தப் பலகையில் இடம் பெற வேண்டும். | சிறு தேர்வு |
| 5. | பார்த்து நடக்க வேண்டும் | 249 | 10 நிமிடம் | சிவப்பு வண்ணமிடு<br>பச்சை வண்ணமிடு | சிறு தேர்வு |

**பக்கம் :244**

பாடநூலில் 244 ல் உள்ள சரியா ? தவறா ? வண்ணமிடுக பயிற்சியை மாணவர்களைச் செய்ய வைத்தல்.

**பக்கம் :248**

பாடநூலில் 248ம் பக்கம் உள்ள எது சரி ? எது தவறு ? பயிற்சியைப் படம் பார்த்துக் குறிக்கச் செய்தல்

**பக்கம் :249, 250**

படம் பார்த்து பயிற்சியைப் பாடநூலில் செய்ய வைத்தல்.

**நினைவில் கொள்க**

1. முக்கிய சாலைப் போக்குவரத்து விதிகளை அறிதல் மற்றும் மதித்தல்
2. போக்குவரத்து விதிகளை கடைபிடித்தல், பாதுகாப்பாக நடத்தல்.
3. சாலை எச்சரிக்கை குறியீடுகள், வாகனங்களுக்கான எச்சரிக்கை விளக்கு ஆகியவற்றை புரிந்து நடத்தல்.



www.TeacherTN.com

# முதல் பருவ பாடத்திட்டம் – 3ஆம் வகுப்பு

| வ.எண் | பாடத் தலைப்பு | பாட வேளைகள் | பாடப்பொருள் |
|---|---|---|---|
| 1. | எனக்குப் பிடித்த உலகம் | 7 | தான் வாழ்கின்ற மக்களோடும், சூழலோடும் தன்னை தகவமைத்துக் கொள்ளல்<br>வீட்டில், சுற்றுப்புறத்தில், பள்ளியில் தன் பங்கை உணர்தல் |
| 2. | எனது சுற்றுப்புறம் | 7 | சமூக நாகரிக ஒழுங்கு குறித்து அறிதல்<br>சுற்றுசூழலைப் பொறுப்புணர்ச்சியுடன் கையாளுதல். |
| 3. | பள்ளிக்கு வரும் வழியில் | 7 | சாலையின் இருபுறத்திலும் பார்த்தவை<br>வலது இடது அறிதல்<br>வரைபடத்தின் அடிப்படைகளைத் தெரிந்து கொள்ளல். |
| 4. | திசைகளை அறிவோம் | 7 | திசைகளை அடையாளம் காணுதல்<br>வரைபடத்தில் திசைகளைக் குறித்தல்<br>வரைபடம் வரைதல் |
| 5. | பார்த்து நடக்க வேண்டும் | 8 | சாலை விதிகள்<br>சாலைக் குறியீடுகள்<br>பாதுகாப்பு விதிகளை அறிந்து கொள்ளுதல்<br>சாலையில் எச்சரிக்கையாக சென்று வர அறிதல் |



www.TeacherTN.com

# வினா தாள் வடிவமைப்பு (III)

மொத்த மதிப்பெண்கள் (60) காலம்:1½ மணி நேரம்

| வ.எண் | வினா வகை | வினாக்கள் | மதிப்பெண்கள் | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| 1 | நிரப்புக | 5 | 2 | 10 |
| 2 | சரியா ? தவறா ? என எழுதுக | 5 | 1 | 5 |
| 3 | பொருத்துக | 5 | 1 | 5 |
| 4 | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | 5 | 1 | 5 |
| 5 | விடையளி | 4 | 5 | 20 |
| 6 | வரைந்த படத்தில் வண்ணம் தீட்டுதல் | 5 | 2 | 10 |
| 7 | வரைபடம் வரைதல் | 1 | 5 | 5 |
| | மொத்தம் | 30 | | 60 |

## முதல் பருவத்தேர்வு– மூன்றாம் வகுப்பு

காலம்: 1 ½ மணி நேரம் மதிப்பெண்கள்: 60

I கோடிட்ட இடங்களை நிரப்புக 5x2=10

1. உனது வீட்டில் பேசும் மொழி ____________
2. குப்பைகளைக் ____________ கூடையில் மட்டுமே போட வேண்டும்
3. உனது தந்தையின் பெயர் ____________
4. சூரியன் மறையும் திசை ____________
5. சாலையில் ____________ செல்ல வேண்டும்



www.TeacherTN.com

II சரியா(✓) தவறா(×) என அடைப்புக் குறிக்குள் குறியிடுக 5x2=10

6. அனைவரையும் மதித்தல் வேண்டும் ( )
7. பொது இடங்களில் எச்சில் துப்புதல் கூடாது ( )
8. விளையாடிய பின்பு கை, கால்களைக் கழுவ வேண்டும் ( )
9. வடக்கு திசைக்கு எதிர் திசை மேற்கு திசை ( )
10. சாலையில் விளையாடுவது ( )

III பொருத்துக 5x1=5

| | | |
|---|---|---|
| 11. கடற்கரை | – | ஊஞ்சல் |
| 12. நகரம் | – | எச்சரிக்கை விளக்கு |
| 13. காந்தமுள் | – | மேம்பாலங்கள் |
| 14. வாகனங்கள் | – | படகுகள் |
| 15. பூங்கா | – | வடக்கு |

IV சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக 5x1=5

16. செடிகளை பராமரிப்பது ____________ வேலை.
(காவலாளி, பிறருடைய, என்னுடைய)
17. எனக்கு பாட்டியிடம் ____________ கேட்கப் பிடிக்கும்.
(கதை, காசு, அறிவுரை)
18. உன் வீட்டிற்கு கடிதங்கள் வந்து சேர ____________ தேவை
(மிதிவண்டி, முகவரி, தபால்பெட்டி)
19. சூரியன் உதிக்கும் திசை ____________
(தெற்கு, கிழக்கு, மேற்கு)
20. சாலையில் நடக்கும் போது____________ பின்பற்ற வேண்டும்
(சாலைவிதிகளைப், விளையாட்டுவிதிகளைப், பள்ளிவிதிகளைப்)

IV விடையளி 4x5=20

21. நான்கு அடிப்படை திசைகள் எவை ? உன் பள்ளியின் இருப்பிடத்தை திசைகளுடன் விவரி ?
22. சாலையைக் குறுக்கே கடக்கும் பொழுது கவனிக்க வேண்டிய விதிகள் யாவை ?
23. பொது இடங்களில் நாம் என்னென்ன விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் ?
24. நகரங்களில் சாலையின் குறுக்கே வெள்ளைக்கோடுகள் ஏன் போடப்பட்டு உள்ளன ?



www.TeacherTN.com

**V படம் வரைந்து வண்ணம் தீட்டுக** **5x1=5**

25.  – இடப்பக்க வளைவு

26.  – வேகத்தடை

27.  – பள்ளம் உள்ளது

28.  – வலப்பக்க வளைவு

29.  – இருப்புப் பாதை

**VI கீழ்க் கண்ட குறிப்பிற்கேற்ப வரைபடம் வரைக** **1x5=5**

30. உன் பள்ளியை வரைபடமாக வரைக.

# சமூக அறிவியல் – நான்காம் வகுப்பு

## முதல் பருவம்
## பாடம் 1 முதல் 5 வரை

1. விண்வெளி விந்தைகள்
2. தொடரும் மாற்றங்கள்
3. இயற்கையின் பரிசு
4. யானை சொல்லும் கதை
5. சுதந்திர இந்தியா



www.TeacherTN.com

**உள்ளே ஒவ்வொரு பாடத்திலும்**

- **புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ&ஆ [FA(a) &FA(b)]**
- **கூடுதல் வளரறி மதிப்பீடு அ & ஆ [FA(a) &FA(b)]**
- **நினைவில் கொள்க**

## பாடம் 1 – விண்வெளி விந்தைகள்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– [FA(a)]

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | விண்வெளி விந்தைகள் | தனியாள் | 211-216 | 1 வாரம் | செய்தித்தாள்களில் காணும் செய்திகளையும் படங்களையும் சேகரித்துப் படத்தொகுப்பு தயார் செய்தல். | படத்தொகுப்புத் தயாரித்தல். |
| 2. | விண்வெளி விந்தைகள் | குழு செயல் | 215 216 | 30 நிமிடம் | உன் நண்பர்களோடு சேர்ந்து கோள்களாக நடித்து சூரிய குடும்பத்தைப்பற்றி விளக்குதல். | கதாபாத்திரம் ஏற்று நடித்தல். (Role Play) |
| 3. | விண்வெளி விந்தைகள் | தனியாள் | 214 | 1 வாரம் | சூரியக் குடும்பத்தின் மாதிரியைப் பந்துகளையும் மணிகளையும் பயன்படுத்தித் தயார் செய்தல். | உரு மாதிரி தயாரித்தல் |

### கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– FA(a)

செயல் – 1 : **உரு மாதிரி செய்தல்**

பக்க எண் : **211**

கால அளவு : **15 நிமிடம்**

செயல் வகை : **தனியாள் செயல்பாடு**

கற்றல் வெளிப்பாடு : **விண்வெளியில் உள்ள பொருட்களை அறிதல்.**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

- மாணவர்களை இரவு வானத்தின் மாதிரியை உருவாக்கக் கூறுதல்.
- அட்டையில் வெள்ளைத் தாளை ஒட்டச் செய்தல்.
- அந்த வெள்ளைத் தாளில் கருப்புமை பூசச் செய்தல்.
- தேவையான அளவு நட்சத்திரங்களை மற்றொரு வெள்ளைத் தாளில் வெட்டி எடுத்தல்.
- அதை கருப்புமை பூசிய அட்டையில் ஒட்டி இரவு வானம் உருவாக்கச் செய்தல்





www.TeacherTN.com

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- நேர்த்தி
- பாடப்பொருளுடன் உள்ளத் தொடர்பு.
- செயலை முடிக்கும் விதம்.
- வடிவமைத்தல் முறை.
- விவரிக்கும் திறன்.

| | |
|---|---|
| செயல் – 2 | : **பங்கேற்று நடித்தல்** |
| பக்க எண் | : **212** |
| கால அளவு | : **10 நிமிடம்** |
| செயல் வகை | : **குழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **விண்வெளியில் உள்ள கோள்களைப் புரிந்து கொள்ளுதல்.** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

- மூன்று மாணவர்களை பூமி, துணைக்கோள் மற்றும் சூரியன் மாதிரி பங்கேற்று நடிக்கச் செய்தல்.
- துணைக்கோள் பூமியையும், பூமி சூரியனையும் சுற்றி வருமாறு பங்கேற்று நடிக்கச் செய்தல்.
- பிற மாணவர்கள் அதைக் கவனித்து பூமியின் தற்சுழற்சியுடன் சூரியனையும் வலம் வருதலை புரிந்து கொண்டு வரையச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

- குழு மனப்பான்மை
- பங்களிப்பு
- ஆர்வம்
- ஈடுபாடு

| | |
|---|---|
| செயல் –3 | : **குழு விவாதம்** |
| பக்க எண் | : **213** |
| கால அளவு | : **15 நிமிடம்** |
| செயல் வகை | : **குழு செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **விண்வெளியில் உள்ள சூரியனைப் பற்றி அறிதல்.** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

- வகுப்பறையை இரண்டு குழுக்களாகப் பிரித்தல்.
- ஒரு குழுவை, சூரியன் அவர்கள் வீட்டுக்கு அருகில் வந்தால் என்ன நடக்கும் ? என்பதை கற்பனை செய்து கலந்துரையாடச் செய்தல்.
- மற்றொருக் குழுவை, சூரியன் இல்லாமல் இருந்தால், இவ்வுலகம் எவ்வாறு இருக்கும் என்பதை கலந்துரையாடச் செய்தல்.
- ஒவ்வொரு குழுவையும் வகுப்பின் முன்னிலையில் தங்களின் கருத்தை வெளிப்படுத்தச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- குழு மனப்பான்மை
- பிறர் கருத்துக்கு மதிப்பளித்தல்.
- அறிவுப்பூர்வமாக சிந்தித்தல்.
- வரிசைக் கிரமமாக தொடர்புப்படுத்தி விவாதித்தல், கவனத்தை ஈர்த்தல்.



www.TeacherTN.com

# புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ– FA(b)

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | விண்வெளி விந்தைகள் | தனியாள் | 217 | | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | சிறு தேர்வு |
| 2. | விண்வெளி விந்தைகள் | தனியாள் | 217 | 15 நிமிடம் | கோடிட்ட இடங்களை நிரப்புக. | சிறு தேர்வு |
| 3. | விண்வெளி விந்தைகள் | தனியாள் | 217 | | வினாக்களுக்கு விடையளிக்க | சிறு தேர்வு |
| 4. | விண்வெளி விந்தைகள் | குழுச் செயல் | 217 | 15 நிமிடம் | சூரியக் குடும்பம் என்ற தலைப்பில் மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து வினாடி வினா நிகழ்ச்சி நடத்துதல். | வினாடி வினா |

## கூடுதல் வளரறி மதிப்பீடு ஆ– FA(b)

செயல் – 1 : **புதிர்**
பக்க எண் : **213**
கால அளவு : **15 நிமிடம்**
செயல் வகை : **தனியாள் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **விண்வெளியில் உள்ள கோள்களைப் பற்றி அறிதல்.**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

மாணவர்கள் கீழ்க்காணும் குறிப்புக்களை பயன்படுத்தி கட்டங்களில் உள்ள விடைகளை வண்ணமிட்டுக் காட்ட செய்தல்.

1. நான் மிகப் பெரியவன். **(வியாழன்)**
2. நான் மிகவும் தொலைவில் இருக்கிறேன். **(நெப்டியூன்)**
3. நான் மிகச் சிறியவன். **(புதன்)**
4. நான் உருண்டு கொண்டே சுற்றுவேன். **(யுரேனஸ்)**
5. நான் சில மாதங்களில் காலையிலும். சில மாதங்களில் மாலையிலும் தென்படுவேன். **(வெள்ளி)**
6. என்னில் மட்டும் தான் உயிரினங்கள் காணப்படுகின்றன. **(பூமி)**
7. என்னைச் சுற்றி அழகான ஏழு வளையங்கள் உள்ளன. **(சனி)**
8. என்னை சிவப்புக்கோள் என்று அழைப்பர். **(செவ்வாய்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | பு | மி | ர | த | வே | ம | வி |
| கோ | த | ற | யு | ரே | ன | ஸ் | யா |
| ப | ன் | வ | மோ | ள | வெ | ள | ழ |
| நெ | ப் | டி | யூ | ன் | ள் | ண | ன் |
| ள | ட | ன் | க | க | ளி | யு | அ |
| தி | பூ | கை | செ | வ் | வா | ய் | பீ |
| வா | மி | பெ | ரை | மி | ழ | வி | ச |
| ந | யு | கோ | ச | நெ | பூ | வெ | னி |



www.TeacherTN.com

**நினைவில் கொள்க**

1. சூரிய குடும்பத்தில் எட்டு கோள்கள் உள்ளன.
2. விண்மீன் விண்வெளியில் காணப்படும் ஒரு பெரிய ஒளிரும் கோளமாகும்.

## பாடம் 2 – தொடரும் மாற்றங்கள்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(a)

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தொடரும் மாற்றங்கள் | தனியாள் | 220-221 | 1 மாதம் | இந்த மாதத்தின் நாட்களை வரிசையாக எழுதச் செய்து . ஒவ்வொரு நாளிலும் நிலவும் வானிலையைக் குறித்து வைத்தல். அம்மாத இறுதியில் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் எழுதச்செய்தல். | செயல்திட்டம் |
| 2. | தொடரும் மாற்றங்கள் | குழு செயல் | 221 | 10 நிமிடம் | கோடைக்காலத்தில் மக்கள் கோடை வாழிடங்களுக்கு செல்லக் காரணம் என்ன ? | குழு விவாதம் |
| 3. | தொடரும் மாற்றங்கள் | குழு செயல் | 219 | 10 நிமிடம் | பூமி தன் அச்சில் நேராய் சுழலுமானால் என்ன நிகழும் ? | குழு விவாதம் |
| 4. | தொடரும் மாற்றங்கள் | குழு செயல் | 220 | 10 நிமிடம் | பூமி வட்டப் பாதையில் சுற்றுமானால் என்ன நிகழும் ? | குழு விவாதம் |
| 5. | தொடரும் மாற்றங்கள் | தனியாள் | 221 | 5 நிமிடம் | ஒவ்வொரு பருவ காலத்தில் பயன்படுத்தும் உணவு, உடை மற்றும் பொருள்களை பட்டியலிடச் செய்தல். | அட்டவணைப் படுத்துதல் |

செயல் – 1 : **செய்து காட்டல்**
பக்க எண் : **218**
கால அளவு : **5 நிமிடம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **பூமியின் சீரான இயக்கங்களையும், அன்றாட வாழ்வில் அதன் தாக்கங்களையும் பற்றி அறிதல்.**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

டார்ச் லைட், பந்து போன்றவற்றைக் கொண்டு இரவு பகல் தோன்றுவதை சோதனை செய்து காண்பிக்கக் கூறுதல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ஆர்வம்
- பங்கேற்றல்
- குழு மனப்பான்மை

செயல் –2 : **விழா கொண்டாடுதல்**
பக்க எண் : **220, 221**
கால அளவு : **10 நிமிடம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **வெவ்வேறு பருவக் காலங்களை வகைப்படுத்தி அறிதல்**



www.TeacherTN.com

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

- ❖ மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்தல்
- ❖ இலையுதிர் காலம் மற்றும் வசந்த காலத்தில் மரங்களில் நிகழும் மாற்றங்களை வரைந்து வண்ணமிடக் கூறுதல்.

**(அல்லது)**

- ❖ பருவகால மாற்றத்தை காண்பிக்கும் தினம் (Season Day) கொண்டாடச் செய்தல். கோடை காலம் மற்றும் குளிர்க்காலத்தை குறிக்கும் ஆடை, உணவு மற்ற உபயோகிக்கும் பொருள்களை பயன்படுத்தி (Season Day) கொண்டாடச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ◆ ஆர்வமுடன் பங்கேற்றல்
- ◆ முழுமை
- ◆ படைப்பில் புதுமை கையாளுதல்
- ◆ அழகுணர்ச்சி
- ◆ கையாண்ட பொருட்களை ஒழுங்குப்படுத்தும் விதம்

செயல் – 2 : **பங்கேற்று நடித்தல்**
பக்க எண் : **224**
கால அளவு : **15 நிமிடம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **பூமியின் சீரான இயக்கங்களையும், அன்றாட வாழ்வில் அதன் தாக்கங்களையும் பற்றி அறிதல்.**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

- ❖ மாணவர்களை நான்கு குழுக்களாக பிரித்தல்.
- ❖ முதல் இரு குழுக்களையும் சூரியக் கிரகணம் உருவாகும் விதத்தை நடித்துக் காட்டக் கூறுதல்.
- ❖ மற்ற இரு குழுக்களையும் சந்திரகிரகணம் உருவாகும் விதத்தை நடித்துக் காட்டக் கூறுதல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ◆ ஆர்வம்
- ◆ மகிழ்வுடன் பங்கேற்றல்
- ◆ குழு மனப்பான்மை
- ◆ பாடப்பொருள்
- ◆ வெளிப்படுத்தும் திறன்

## <u>புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ– FA(b)</u>

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தொடரும் மாற்றங்கள் | தனியாள் | 225 | 10 நிமிடம் | கோடிட்ட இடத்தை நிரப்புக. | சிறு தேர்வு |
| 2. | தொடரும் மாற்றங்கள் | தனியாள் | 225 | | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | சிறு தேர்வு |
| 3. | தொடரும் மாற்றங்கள் | தனியாள் | 225 | | பொருத்துக. | சிறு தேர்வு |
| 4. | தொடரும் மாற்றங்கள் | தனியாள் | 226 | 5 நிமிடம் | சூரிய கிரகணம் மற்றும் சந்திர கிரகணத்தின் போது சந்திரன், சூரியன், பூமி ஆகியவை எவை எனக் கண்டுபிடித்து எழுதி வண்ணமிடுக. | சிறு தேர்வு |
| 5. | தொடரும் மாற்றங்கள் | தனியாள் | 226 | | வினாக்களுக்கு விடையளி. | சிறு தேர்வு |
| 6. | தொடரும் மாற்றங்கள் | தனியாள் | 223 | 5 நிமிடம் | பருவ காலங்கள் நமக்கு தரும் பலன்களை பட்டியல் இடு. | சிறு தேர்வு |



www.TeacherTN.com

**நினைவில் கொள்க**

**இந்தியாவின் பருவ காலங்கள்**

இந்தியாவில் மூன்று பருவகாலங்கள் காணப்படுகின்றன.

1. வெப்பமான கோடைக் காலம்.
2. குளிர் காலம்
3. மழைக்காலம்

## பாடம் 3 – இயற்கையின் பரிசு

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(a)

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | இயற்கையின் பரிசு | துனியாள் | 234 | 30 நிமிடம் | 'நீர் சேமிப்பு', 'மின்சாரச் சிக்கனம்' இத்தலைப்புகளில் விழிப்புணர்வு வாசகங்களை எழுதி சுவரொட்டிகளை வரைந்து வகுப்பறையில் ஒட்டச்செய்தல். | சுவரொட்டிகள் தயாரித்தல் |
| 2. | இயற்கையின் பரிசு | குழுச் செயல் | 234 | 10 நிமிடம் | குழுக்களாகப் பிரிந்து நாம் பயன்படுத்தும் பொருட்களில் மண்ணிலிருந்து கிடைக்கும் பொருட்களைப் பட்டியலிடுதல். | அட்டவணைப் படுத்துதல். |
| 3. | இயற்கையின் பரிசு | தனியாள் | 231 | 1 வாரம் | மண் வகைகளை சேகரித்து அலங்கரித்தல். | சேகரித்தல் |
| 4. | இயற்கையின் பரிசு | தனியாள் | 232 | 1 வாரம் | காற்று மாசுபடுதல் படத் தொகுப்பு தயார் செய்தல். | படத்தொகுப்பு தயாரித்தல். |

செயல் – 1 : **உரு மாதிரி செய்தல்**
பக்க எண் : **229**
கால அளவு : **1 வாரம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **இயற்கை வளமான தண்ணீரின் அருமையைப் போற்றிக் காத்தல்.**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

✡ மாணவர்களை மூன்று பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்தல்.
✡ வீடு, பள்ளி மற்றும் பொது இடங்களில் காணப்படும் மழை நீர் சேகரிப்புத் தொட்டியின் மாதிரி உருவாக்கக் கூறுதல்.
✡ மாணவர்கள் வாழும் சூழலில் கிடைக்கும் எளிய பொருட்களைக் கொண்டு மழைநீர் சேகரிப்புத் தொட்டி தயாரிக்கக் கூறுதல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

☸ படைப்பாற்றல்
☸ ஆர்வம்
☸ நேர்த்தி
☸ பாடப்பொருள்
☸ கால அளவு

செயல் – 2 : **படத்தொகுப்பு தயாரித்தல்**
பக்க எண் : **227**
கால அளவு : **1 வாரம்**
செயல் வகை : **தனியாள் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **வெவ்வேறு வகையான மூல வளங்களை அறிதல்.**



www.TeacherTN.com

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

✡ புதுப்பிக்க கூடிய வளங்கள், புதுப்பிக்க இயலாத வளங்களைக் பட்டியலிடச் செய்தல்
✡ அவற்றின் படங்களைச் சேகரித்து படத்தொகுப்புத் தயாரிக்கச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

☸ வகைப்படுத்திய விதம்
☸ படங்களின் தெளிவு
☸ படைப்பாற்றல்
☸ ஆர்வம்
☸ அழகுணர்ச்சி

| | |
|---|---|
| செயல் – 3 | : **வழக்காடு மன்றம்** |
| பக்க எண் | : **233** |
| கால அளவு | : **20 நிமிடம் (10 நிமிடம் தயாரிப்பிற்கு 10 நிமிடம் வழக்காடுவதற்கு)** |
| செயல் வகை | : **குழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **மூல வளங்களைப் பாதுகாத்தல்.** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

✡ வகுப்பை இரண்டு குழுக்களாகப் பிரித்தல்.
✡ 'காடுகள் அழியாமல் பாதுகாக்க வேண்டியது அவசியம் – அவசியம் இல்லை' என்ற தலைப்பில் வழக்காடக் கூறுதல்.
✡ ஒவ்வொரு குழுவையும் தனக்கு விருப்பமான தலைப்பைத் தேர்ந்தெடுக்கச் செய்தல்.
✡ குழுவில் தம் தலைப்பிற்கேற்ப கருத்துகளைச் சேகரிக்கச் செய்தல். இதற்கு 10 நிமிடம்ஒதுக்கலாம்.
✡ பின் வழக்காடு மன்றம் நடத்துதல் (10 நிமிடம்).

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

☸ கருத்துக்கள் சேகரித்தல்.
☸ வெளிப்படுத்தும் விதம்.
☸ தன் கருத்தில் நிலையாக இருத்தல்.
☸ எதிர்வாதம் சரியான முறையில் இருத்தல்.
☸ பிறர் கருத்தைக் கேட்டல்

| | |
|---|---|
| செயல் – 4 | : **போட்டிகள் நடத்துதல்** |
| பக்க எண் | : **233** |
| கால அளவு | : **1 மணி நேரம்** |
| செயல் வகை | : **தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **பூமியை மூல வளமாகக் கருதி காத்தல்.** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

✡ 'புவி வெப்பமயமாதலைத் தடுத்தல்' என்னும் தலைப்பில் மாணவர்களுக்குப் போட்டிகள் நடத்துதல்.
✡ பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி.
✡ விழிப்புணர்வு வாசகம் தயாரித்தல்.
✡ இவற்றில் ஏதேனும் ஒரு தலைப்பை மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுத்து கலந்து கொள்ள வைத்தல்.
✡ ஆசிரியர் சிறு சிறு குறிப்புகள் கொடுத்து மாணவர்களை அச்செயலைச் செய்ய வைத்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

☸ அழகுணர்ச்சி
☸ கருத்து
☸ மேடை நாகரிகம்
☸ ஆர்வம்

| | |
|---|---|
| செயல் – 5 | : **பள்ளித்தோட்டம் அமைத்தல்** |
| பக்க எண் | : **230** |



www.TeacherTN.com

காலஅளவு : **1 மாதம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **இயற்கை வள பாதுகாப்பை அறிதல்.**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

- ✡ வகுப்பை ஐந்து குழுக்களாகப் பிரித்தல்.
- ✡ ஒவ்வொரு குழுவிற்கும் பள்ளியில் தோட்டம் அமைக்க இடம் ஒதுக்குதல்.
- ✡ அவர்களுக்குத் தேவையான விதைகள், செடிகள், நாற்றுகள் கொடுத்து நட்டு பராமரிக்கக் கூறுதல்.
- ✡ ஒவ்வொரு வாரமும் செடியின் வளர்ச்சியைக் குறித்து வைக்கச் செய்தல்.
- ✡ பள்ளியில் தோட்டம் அமைக்க இடம் இல்லை எனில் மண் பானைகளில் வளர்க்கக் கூறுதல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ❁ குழு மனப்பான்மை
- ❁ பராமரித்தல்
- ❁ பதிவு செய்தல்

செயல் – 6 : **விழிப்புணர்வு வாசகங்கள் தயாரித்தல்**
பக்க எண் : **233**
கால அளவு : **15 நிமிடம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **பூமி – மூலவளம்–அருமையை போற்றிப் பாதுகாத்தல் .**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

- ✡ ‘காடு வளர்ப்பு’ குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் தயாரிக்கச் செய்தல்.
- ✡ தயாரித்த வாசகங்களைத் தகவல் பலகையிலோ அல்லது வகுப்பறையிலோ ஒட்டச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ❁ அழகுணர்வு
- ❁ வாசகக் கருத்து
- ❁ ஆர்வம்
- ❁ ஓசை நயம்
- ❁ கவனத்தை ஈர்க்கும் திறன்

## <u>புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ– FA(b)</u>

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | இயற்கையின் பரிசு | தனியாள் | 234 | 5 நிமிடம் | இரண்டு படங்களுக்கு இடையே உள்ள வித்தியாசங்களை கண்டுபிடிக்கச்செய்து, நிலம், நீர், காற்று மாசடைவதற்கான காரணிகளைக் கண்டறிந்து அதற்குரிய கட்டங்களில் எழுதச்செய்தல். | சிறு தேர்வு |
| 2. | இயற்கையின் பரிசு | தனியாள் | 235 | 15 நிமிடம் | கோடிட்ட இடத்தை நிரப்பச் செய்தல். | சிறு தேர்வு |
| 3. | இயற்கையின் பரிசு | தனியாள் | 235 | | வகைப்படுத்துக. | சிறு தேர்வு |
| 4. | இயற்கையின் பரிசு | தனியாள் | 235 | | சரி(√) தவறு (X) எனக் குறியிடுக. | சிறு தேர்வு |



www.TeacherTN.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | இயற்கையின் பரிசு | தனியாள் | 235 | | வினாக்களுக்கு விடையளி. | சிறு தேர்வு |
| 6. | இயற்கையின் பரிசு | தனியாள் | 228 | | சிந்திக்க. | சிறு தேர்வு |

## நினைவில் கொள்க

- இயற்கை வளங்களை புதுப்பிக்கக் கூடிய வளங்கள், புதுப்பிக்க இயலாத வளங்கள் என்று பிரிக்கலாம்.
- மழைக் காலங்களில் வீணாகும் மழை நீரைப் பூமியில் சேகரிப்பதை மழை நீர் சேகரித்தல் என்கிறோம்.
- வளிமண்டலத்தில் கார்பன்–டை–ஆக்சைடு அளவு அதிகரிப்பதை புவி வெப்பமயமாதல் என்கிறோம்.

## பாடம் 4 – யானை சொல்லும் கதை

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(a)

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | யானை சொல்லும் கதை | தனியாள் | 243 | 1 வாரம் | தோகையில்லா இந்த மயிலில் உனக்கு கிடைக்கும் இறகுகளைக் கொண்டு அலங்கரிக்கவும் | கைவினைப் பொருட்கள் தயாரித்தல். |
| 2. | யானை சொல்லும் கதை | தனியாள் | 244 | 20 நிமிடம் | செயல்பாடு<br>கீழ்க்கண்ட தமிழ்நாடு அரசியல் பிரிவு வரை படத்தை ஒரு தாளில் பிரதி எடுத்து<br>அ) பறவைகள் சரணாலயம் காணப்படும் மாவட்டங்களில் மாணவனுக்குத் தெரிந்த பறவைகளின் படங்களை வரையச்செய்தல்.<br><br>ஆ) விலங்குகள் சரணாலயம் காணப்படும் மாவட்டங்களில் ஏதேனும் ஒரு விலங்கின் படத்தை வரையச்செய்தல்.<br> | வரைபடத்திறன் |
| 3. | யானை சொல்லும் கதை | தனியாள் | 238 | 15 நிமிடம் | மாணவனுக்குப் பிடித்த விலங்கின் படம் வரைந்து வண்ணமிடச் செய்தல். | வரைந்து வண்ணமிடல் |
| 4. | யானை சொல்லும் கதை | தனியாள் | 239 | 15 நிமிடம் | மாணவனுக்குப் பிடித்த பறவையின் படம் வரைந்து வண்ணமிடச்செய்தல். | வரைந்து வண்ணமிடல் |

## கூடுதல் வளரறி மதிப்பீடு அ– FA(a)

செயல் –1 : **'போல நடித்து ' தன் வரலாறு கூறச் செய்தல்**
பக்க எண் : **237**
கால அளவு : **20 நிமிடம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **விலங்குகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல் .**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

- மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாக பிரித்தல்



www.TeacherTN.com

- ❁ கீழ்க்கண்ட விலங்குகள்/ பறவைகள் பட்டியலைச் குழுவிற்கு ஆசிரியர் அளித்தல்.
  யானை, புலி, மான், கரடி, சிங்கவால் குரங்கு, முயல், மயில், சிங்கம் இவற்றில் ஏதேனும் இரண்டு தலைப்பை மாணவர்கள் குழுவிற்கு அளித்தல்.
- ❁ அந்த விலங்கு/பறவை பற்றிய செய்திகளைச் சேகரித்து குழுவில் கலந்துரையாடக் கூறுதல்.
- ❁ ஒவ்வொரு குழுவும் மேற்கண்ட தலைப்பிற்குத் தகுந்தவாறு நடித்து தன் வரலாறு கூறச் செய்தல்.
- ❁ விலங்குகள் மற்றும் பறவைகளின் முகமூடிகள் அணிந்து தன் வரலாறு கூறச் செய்தால் சிறப்பாக இருக்கும்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ★ மாணவர்கள் பாடப்பொருளுக்கேற்ற செய்திகளை வெளிப்படுத்தும் திறன் சோதித்தறிதல்.
- ★ மகிழ்ச்சியுடன் நேர்த்தியாக பங்கேற்கும் விதம்.
- ★ ஆர்வம்
- ★ ஈடுபாடு

| | |
|---|---|
| செயல் –2 | **: படத்தொகுப்பு தயாரித்தல்** |
| பக்கம் | **: 237** |
| கால அளவு | **: 1 வாரம்** |
| செயல் வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: பிற உயிரினங்களிடம் அன்பு காட்டுதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

- ❁ மாணவர்களுக்குத் தெரிந்த / கிடைக்கக் கூடிய விலங்குகள் மற்றும் பறவைகளின் படங்களைச் சேகரித்து (செய்தித்தாள்கள், வார இதழ்கள் மற்றும் பழைய புத்தகங்களிலிருந்து) சிறு படத் தொகுப்பு தயாரிக்கச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ★ இச்செயல்பாட்டை நேர்த்தியாகவும் விரைவாகவும் செய்து முடிக்கும் திறனை சோதித்தறிதல்.
- ★ படத்தொகுப்பின் அளவு, பாடக்கருத்துக்களை ஒட்டி படங்களின் தெரிவு ஆகியவற்றைக் கோண்டு மாணவர்களை மதிப்பிடுதல்.
- ★ மாணவர்களின் ஆர்வம், ஈடுபாடு.

| | |
|---|---|
| செயல் –3 | **: உரு மாதிரி செய்தல்** |
| பக்கம் | **: 238, 239.** |
| கால அளவு | **: 30 நிமிடம்** |
| செயல்வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: உருமாதிரிகளை காகிதங்களில் செய்தல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

- ❁ ஆசிரியர் மாணவர்களிடம் காகிதத்தில் உனக்குப் பிடித்த விலங்குகள், பறவைகளின் உரு மாதிரியை வடிவமைக்கச் செய்தல் (அ) வரையச் செய்தல்.
- ❁ வடிவமைக்கப்பட்ட விலங்குகள், பறவைகளின் உருவங்களைத் தாளில் ஒட்டச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ★ மாணவர்களின் ஈடுபாடு ஆர்வம்.
- ★ நேர்த்தியாக செயல்பாட்டை செய்து முடித்தல்.
- ★ உருவத்தை சரியாக வடிவமைத்தல்.
- ★ உருவ முழுமை
- ★ படைப்பாற்றல்



www.TeacherTN.com

செயல் – 4 : **கதை கூறுதல்**
பக்கம் : **238, 239.**
கால அளவு : **20 நிமிடம்**
செயல்வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **நீதிக் கதைகள் படிக்கும் ஆர்வத்தை வளர்த்தல்**

**வகுப்பறை செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

❁ மாணவர்களை ஒரு குழுவில் இரு உறுப்பினர்களைக் கொண்ட பல்வேறு குழுக்களாகப் பிரித்தல்.
❁ அக்குழுக்களை தங்களுக்குத் தெரிந்த பறவைகள் மற்றும் விலங்குகள் தொடர்பான நீதிக் கதைகளையும் அக்கதை விளக்கும் நீதியையும் கூறச் செய்தல்.

**ஆசிரியர் மதிப்பீடு செய்யும் விதம்**

★ கதை வாழ்க்கைத் திறனை மேம்படுத்தும் விதமாக அமைந்திருப்பதைச் சோதித்தறிதல்.
★ கதை சொல்லும் விதம்,
★ உச்சரிப்பு,
★ முகபாவனை.
★ ஆர்வம், ஈடுபாடு.

செயல் – 5 : **வழக்காடு மன்றம்**
பக்கம் : **236, 237.**
கால அளவு : **கலந்துரையாடல் 10 நிமிடம், வழக்காடலுக்கு 10 நிமிடம்.**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **சரணாலயங்களின் முக்கியத்துவத்தை அறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

❁ மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்தல். (வகுப்பில் மாணவர் எண்ணிக்கை அதிகம் இருப்பின் மூன்று குழுக்களாகப் பிரித்தல். இரண்டு குழுவை வழக்காடுவதற்கும், மற்ற குழுக்களை பார்வையாளர்களாகவும் இருக்கச் செய்தல்).
❁ சரணாலயம் தேவையா ? இல்லையா ? என கலந்துரையாடச் செய்தல்.
❁ குழுவில் கலந்துரையாடிய கருத்துகளைக் கொண்டு வழக்காடச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

★ கருத்தைப் பாடத்துடன் தொடர்புபடுத்தல் .
★ தெளிவாகவும், சுருக்கமாகவும் கருத்தை வெளிப்படுத்துதல்.
★ மற்றவர் கருத்துகளைக் கவனித்து, அதற்கேற்ப பதிலளித்தல்.
★ தர்க்க ரீதியாகவும், வரிசைகிரமமாகவும் சிந்தித்தல்.
★ உண்மை மற்றும் தொடர்புடைய கருத்துகளை விவாதத்தின் போது கூறும் திறன்.
★ பார்வையாளர்களின் கவனத்தை தன் பேச்சால் ஈர்த்தல்.

செயல் – 6 : **கலை மற்றும் கைவண்ணம்**
பக்கம் : **238, 239.**
கால அளவு : **15 நிமிடம்**
செயல்வகை : **தனியாள் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **பறவைகள் /விலங்குகள் உருவ வேற்றுமைகள் அறிதல்.**



www.TeacherTN.com

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

**விரல் காட்டும் வித்தைகள்**



வண்ண மை (அ) வண்ண பூச்சு எடுத்து அதை விரல் ரேகைகளில் தேய்த்து, அவற்றைக் கொண்டு பறவை விலங்குகள் உருவங்களை உருவாக்கக் கூறுதல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

★ ஆர்வம்
★ ஓவியங்களின் முழுமை
★ வண்ணங்கள்
★ படைப்பாற்றல்
★ பங்களிப்பு

ණණණණණණණ

| | | |
|---|---|---|
| செயல் – 7 | : | **ஓவியம் வரைதல்** |
| பக்கம் | : | **238, 239.** |
| கால அளவு | : | **30 நிமிடம்** |
| செயல்வகை | : | **சிறுகுழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : | **பறவை விலங்குகளின் படங்களை வரைந்து பழகுதல்.** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**



❁ மாணவர்களை மூன்றுபேர்கொண்ட சிறுசிறு குழுக்களாகப் பிரித்தல்
❁ ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு வெள்ளைத்தாளைக் கொடுத்து அதை மூன்றாக மடிக்கச்செய்தல்
❁ முதல் மடிப்பில் ஒரு மாணவனை அவனுக்குப் பிடித்த விலங்கு / பறவையின் தலையை மட்டும் வரையச்செய்தல், வரையும் பொழுது மற்றவர்களுக்குத் தெரியாமல் வரையச்செய்தல். அதை மறைத்து மடித்து இரண்டாவது மாணவனிடம் கொடுத்தல்.
❁ இரண்டாவது மாணவன் தனக்குப்பிடித்த விலங்கு / பறவையின் உடலை மட்டும் பிறருக்கு காண்பிக்காமல் வரையச்செய்தல்.
❁ மூன்றாவது மாணவன் விலங்கு / பறவையின் கால் பகுதியை மட்டும் வரையக் கூறுதல்.
❁ பிறகு ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னிலையில் தாங்கள் வரைந்த படங்களை மடிப்பை பிரித்துக் காண்பித்தல்.
❁ பிற குழுக்கள் அவை எந்தெந்த விலங்கு / பறவையின்உடல் பகுதிகள் என அடையாளம் காணச்செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

★ ஆர்வம்
★ ஓவியங்களின் முழுமை
★ படைப்பாற்றல்



www.TeacherTN.com

★ பங்களிப்பு
★ கலந்துரையாடல்

செயல் – 9 : மாதிரி உருவாக்குதல்
பக்கம் : 237
கால அளவு : 30 நிமிடம்
செயல்வகை : குழுச் செயல்பாடு
கற்றல் வெளிப்பாடு : விலங்கின் மாதிரியைச் செய்யக் கற்றுக்கொள்ளுதல்.

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

❁ மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்தல்.
❁ கொடுக்கப்பட்டுள்ள யானையின் உருவத்தை தாளிலோ அல்லது சார்ட் அட்டையிலோ படியெடுக்கச் செய்தல் .
❁ படியெடுத்த அட்டையை கூறியுள்ள இடங்களில் வெட்டி மடக்கி அதற்கேற்ப செய்தல்.
❁ வால் வரைந்து வெட்டி எடுத்து யானையின் பின் பகுதியில் ஒட்டச்செய்தல்.
❁ யானைக்கு உரிய வண்ணத்தை தீட்டி அலங்கரித்தல்.




**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

★ ஆர்வம்
★ உருவத்தின் முழுமை
★ படைப்பாற்றல்
★ பங்களிப்பு
★ வண்ணங்கள்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ– FA(b)

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | யானை சொல்லும் கதை | தனியாள் | 244 | 15 நிமிடம் | கோடிட்ட இடத்தை நிரப்புக. | சிறு தேர்வு |
| 2. | யானை சொல்லும் கதை | தனியாள் | 244 | | வினாக்களுக்கு விடையளி. | சிறு தேர்வு |

**நினைவில் கொள்க**

- தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்ட 5 தேசியப் பூங்காக்கள் உள்ளன.
- தமிழ்நாட்டில் உள்ள 7 வனவிலங்குகள் மற்றும் பல்வேறு உயிரினங்களை பாதுகாக்க மூன்று முக்கிய இடங்கள் அவை
  1. மன்னார் வளைகுடா
  2. மேற்கு தொடர்ச்சி மற்றும் நீலகிரி மலைத் தொடர்
  3. அகஸ்தியர் மலை

## பாடம் 5 – சுதந்திர இந்தியா
## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(a)

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சுதந்திர இந்தியா | தனியாள் | 252 | 1 வாரம் | சுதந்திரப் போராட்ட வீரர்களின் படங்களைச் சேகரித்து அட்டையில் ஒட்டச்செய்தல். | படத்தொகுப்பு தயாரித்தல் |
| 2. | சுதந்திர இந்தியா | தனியாள் | 252 | 1 நாள் (தயாரிப்பு) 15 நிமிடம் (உரையாடல்) | உன் ஊரில் உள்ள சுதந்திரப் போராட்டத் தியாகி எவரையேனும் சந்தித்து சுதந்திரப் போராட்டத்தில் அவர்களின் பங்கு குறித்து உரையாடச்செய்தல். | விவரம் சேகரித்தல் |

செயல் –1 : **நடித்தல்**
பக்கம் : **252**
கால அளவு : **20 நிமிடம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **தேசத்தலைவர்களின் வரலாற்றை அறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்தல்
- ஒவ்வொரு குழுவிற்கும் வ.உ.சிதம்பரனார், காமராசர், காந்தியடிகள், ஜவர்ஹலால் நேரு, திருப்பூர் குமரன் போன்ற தேசத்தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை ஆசிரியர் கொடுத்தல்
- அக்குழுவில் மாணவர்கள் தங்களுக்குரிய பாத்திரங்களை ஏற்று நாடகமாக நடிக்கச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ஆர்வம்
- நடிப்புத் திறன்



www.TeacherTN.com

- ➢ படைப்பாற்றல்
- ➢ பங்களிப்பு
- ➢ வரலாற்று நிகழ்வை வெளிப்படுத்துதல்

| | |
|---|---|
| செயல் –2 | **: வண்ணத் தோரணம் தயாரித்தல்** |
| பக்கம் | **: 251** |
| கால அளவு | **: 1 வாரம்** |
| செயல் வகை | **: குழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: தேசப்பற்றை வளர்த்தல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ விடுதலை நாள் விழாவிற்கு பலவித வண்ணத்தோரணங்களை தயாரித்து விடுதலை நாள் விழாவினைக் கொண்டாடச் செய்தல்.
- ❖ விடுதலை நாள் விழா மற்றும் குடியரசு நாள் விழா கொண்டாட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கச் செய்தல். விழாக் கொண்டாட்டம் நடத்துதல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ➢ மகிழ்வுடன் பங்கேற்றல்
- ➢ தேசப் பற்று
- ➢ படைப்பாற்றல்
- ➢ ஈடுபாடு
- ➢ ஆர்வம்

| | |
|---|---|
| செயல் –3 | **: தேசப் பக்திப் பாடல்களை பாடச் செய்தல்** |
| பக்கம் | **: 251** |
| கால அளவு | **: 15 நிமிடம்** |
| செயல் வகை | **: தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: இந்திய விடுதலை போரட்டத் தலைவர்களைப் பற்றி அறிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

மாணவர்கள் அறிந்த தேசபக்திப் பாடல்களை பாடச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ➢ ஆர்வம்
- ➢ கருத்து
- ➢ நயம்
- ➢ முகபாவம்
- ➢ தேசப் பற்று

| | |
|---|---|
| செயல் –4 | **: வரைபடத் திறன்** |
| பக்கம் | **: 252** |
| கால அளவு | **: 20 நிமிடம்** |
| செயல் வகை | **: தனிநபர் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: இந்திய வரைபடத்தில் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகள் நடைபெற்ற முக்கிய இடங்களைக் குறித்தல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள் :**

- ❖ மாணவர்களை இந்திய கோட்டுப்படத்தை படியெடுக்கச் செய்தல்



www.TeacherTN.com

❖ இந்திய புறவரி வரைபடத்திற்குள் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளின் முக்கிய இடங்களை குறிக்கச் செய்தல் (உதாரணமாக – வேலூர்ப் புரட்சி, ஜாலியன் வாலாபாக் படுகொலை, உப்புச் சத்தியாகிரகம், கிழக்கிந்திய கம்பெனிகள் தொடங்கிய இடங்கள்)

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

1. ஆர்வம்
2. வரலாற்று நிகழ்வு குறித்த அறிவு
3. படைப்பாற்றல்
4. செயல்பாட்டில் முழுமை
5. வரைபட அறிவு

## <u>புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ– FA(b)</u>

| வ.எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | வழிமுறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சுதந்திர இந்தியா | தனியாள் | 253 | 15 நிமிடம் | கோடிட்ட இடத்தை நிரப்புக. | சிறு தேர்வு |
| 2. | சுதந்திர இந்தியா | தனியாள் | 253 | | பொருத்துக. | சிறு தேர்வு |
| 3. | சுதந்திர இந்தியா | தனியாள் | 253 | | நிரப்புக | சிறு தேர்வு |
| 4. | சுதந்திர இந்தியா | தனியாள் | 253 | | வினாக்களுக்கு விடையளி | சிறு தேர்வு |

செயல் –1 : **வரைபடத் திறன்**
பக்கம் : **252**
கால அளவு : **30 நிமிடம்**
செயல் வகை : **தனிநபர் செயல்பாடு**

**காந்தியடிகள் கடந்து வந்த பாதை**




செயல் –2 : **சிந்திக்க**
பக்கம் :
கால அளவு : **15 நிமிடம்**



www.TeacherTN.com

செயல் வகை : தனிநபர் செயல்பாடு

நம் நாடு விடுதலையடையாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? எனக் குழுவில் கலந்துரையாடி பட்டியலிடச் செய்தல்.

**நினைவில் கொள்க**

**முக்கிய ஆண்டுகளும் நிகழ்வுகளும்**

| ஆண்டு | நிகழ்வு |
|---|---|
| 1600 | ஆங்கில கிழக்கிந்திய கம்பெனித் துவக்கம் |
| 1806 | வேலூர்ப் புரட்சி |
| 1857 | பெரும் புரட்சி |
| 1905 | சுதேசி இயக்கம், வங்கப் பிரிவினை |
| 1919 | ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் படுகொலை |
| 1920 | ஒத்துழையாமை இயக்கம் |
| 1930 | சட்ட மறுப்பு இயக்கம் |
| 1942 | வெள்ளையனே வெளியேறு இயக்கம் |
| 1947 | இந்தியா விடுதலை அடைதல் |
| 1950 | இந்தியா குடியரசு ஆதல் |

## முதல் பருவ பாடத்திட்டம் – 4ஆம் வகுப்பு

| வ.எண் | பாடத் தலைப்பு | பாட வேளைகள் | பாடப்பொருள் |
|---|---|---|---|
| 1. | விண்வெளி விந்தைகள் | 7 | விண்வெளி<br>கோள்கள்<br>துணைக்கோள்கள்<br>குறுங்கோள்கள்<br>எரிநட்சத்திரங்கள்<br>சூரியக் குடும்பம் |
| 2. | தொடரும் மாற்றங்கள் | 7 | பூமியின் இயக்கம்<br>பூமியின் சுழற்சி<br>பூமி சூரியனைச் சுற்றுதல்<br>வானிலை மற்றும் காலநிலை<br>சூரிய கிரகணம்<br>சதந்திர கிரகணம் |
| 3. | இயற்கையின் பரிசு | 7 | புதுப்பிக்கக் கூடிய வளங்கள்<br>புதுப்பிக்க இயலா வளங்கள்<br>மண்ணின் வளங்கள்<br>சாகுபடி முறைகள்<br>காடுகள்<br>புவி வெப்பமயமாதல் |
| 4. | யானை சொல்லும் கதை | 7 | சரணாலயம்<br>தேசியப் பூங்கா |



www.TeacherTN.com

| 5. | சுதந்திர இந்தியா | 8 | தேசிய காங்கிரஸ்<br>விடுதலைப் போராட்டத்தில் தமிழகம் |
|---|---|---|---|

# சமூக அறிவியல் – வினா திட்ட வரைவு (IV)

**மொத்த மதிப்பெண்கள் (60)** **நேரம்:2 மணி**

| வ. எண் | பாடம் | அறிதல் (19) | | | புரிதல் (21) | | | பயன்படுத்துதல் (21) | | | திறன் (9) | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | புறவய வினா | குறு வினா | பெரு வினா | புறவய வினா | குறு வினா | பெரு வினா | புறவய வினா | குறு வினா | பெரு வினா | புறவய வினா | குறு வினா | பெரு வினா | |
| 1 | 1 | 2 (1) | 1 (2) | | 2 (1) | | | 2 (1) | 1 (2) | | | | | 10 |
| 2 | 2 | 2 (1) | | | 2 (1) | 1 (2) | | 2 (1) | 1 (2) | | | 2 (2) | | 14 |
| 3 | 3 | 2 (1) | 1 (2) | | 2 (1) | | | 2 (1) | | | | | | 8 |
| 4 | 4 | 2 (1) | | | 2 (1) | 1 (2) | | 2 (1) | 1 (2) | | | | | 10 |
| 5 | 5 | 2 (1) | | | 2 (1) | 1 (2) | | 2 (1) | | | | | | 8 |
| மொத்த மதிப்பெண்கள் | | | | 1 (5)✳ | | | 1 (5) | | | 1 (5)✳ | | | 1 (5) | 10(10)✳ |
| | | 10 | 4 | 5✳ | 10 | 6 | 5 | 10 | 6 | 5✳ | | 4 | 5 | 70(10)✳ |

குறிப்பு:-

- அடைப்புக் குறியீட்டுக்குள் கொடுக்கப்பட்டவை வினாக்களின் மதிப்பெண்கள்.
- அடைப்புக் குறியீட்டுக்கு வெளியே இருப்பது வினாக்களின் எண்ணிக்கை.
- ஒரு பெரு வினா (திறன் பகுதியில்) படம் வரைதலாக அமைதல் வேண்டும்.

✳ 10 மதிப்பெண்கள் உபரி வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

✳ நிலவரைபடம் கொடுக்காத மற்ற நான்கு பாடங்களிலிருந்து பெருவினாக்கள் இடம் பெறவேண்டும்.



www.TeacherTN.com

## முதல் பருவத்தேர்வு – நான்காம் வகுப்பு

காலம்: 1 ½ மணி நேரம் மதிப்பெண்கள்: 60

**I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

1. தானாக ஒளிரும் தன்மை கொண்டவை __________
   (அ) நிலா (ஆ) விண்மீன்கள் (இ) கோள்கள்
2. குறுகிய பகல், நீண்ட இரவு காணப்படும் காலம் __________
   (அ) குளிர் காலம் (ஆ) கோடைக்காலம் (இ) வசந்த காலம்
3. புவியின் மேற்பரப்பு __________நீர்ப்பரப்பாகும்
   (அ) 29% (ஆ) 71% (இ) 89%
4. முதுமலைச் சரணாலம் __________ காப்பகம் ஆகும்.
   (அ) சிங்கம் (ஆ) புலி (இ) அணில்
5. இந்தியாவில் பெரும் புரட்சி நடைபெற்ற ஆண்டு __________
   (அ) 1806 (ஆ) 1827 (இ) 1857

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.** **5x1=5**

6. சூரியன் ஒரு __________கோளமாகும்.
7. சூரிய கிரகணம் __________ நாளன்று ஏற்படும்.
8. மண் அரிப்பைத் தடுக்க __________வளர்க்க வேண்டும்.
9. ஆமைகளை பாதுகாக்கும் சரணாலயம் __________
10. இந்திய தேசியக் காங்கிரஸைத் தோற்றுவித்தவர் __________

**III பொருந்தாத சொல்லை வட்டமிடுக.** **5x1=5**

11. புதன், வியாழன், வெள்ளி, ஹைட்ரஜன்
12. சூரியன், பழங்கள், பூக்கள், காய்கள்
13. வண்டல்மண், காற்று, கரிசல் மண், செம்மண்
14. யானை, சிறுத்தை இரட்டைவால் குருவி, புலி
15. காந்தியடிகள், ஹர்சன் பிரபு, நேரு, வ.உ.சிதம்பரனார்

**IV சரியா / தவறா குறிப்பிடுக.** **5x1=5**

16. சூரியனில் உள்ள வாயு மீத்தேன்.
17. பூமி தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக்கொள்ள 24 மணி நேரம் எடுத்துக் கொள்கிறது.
18. 'பிளாஸ்டிக் பை' மக்கும் குப்பை.
19. இரசாயன உரங்கள் மண் வளத்தைப் பெருக்கும்.
20. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார்.



www.TeacherTN.com

**V ஒரே வார்த்தையில் விடை தருக** **5x1=5**

21. சூரிய குடும்பத்தில் உள்ள கோள்கள் எத்தனை ?

22. மரங்களில் புதிய இலைகளும் மலர்களும் தோன்றும் காலம் எது ?

23. இயற்கை வளங்கள் எத்தனை வகைப்படும் ?

24. பறவைகளில் உனக்குப் பிடித்த ஒரு பறவையின் பெயரை எழுதுக ?

25. இந்தியா என்று விடுதலையடைந்தது ?

**VI பொருத்துக** **5x1=5**

| | | |
|---|---|---|
| 26. வேலூர் புரட்சி | – | வியாழன் |
| 27. மிகப்பெரியகோள் | – | ஆலிவ் ரிட்லி |
| 28. கிரகணம் | – | கி.பி.1806 |
| 29. கடல் ஆமை | – | கி.பி.1930 |
| 30. உப்புச் சத்தியாகிரகம் | – | ஒளி மறைப்பு |

**VII குறு வினாக்களுக்கு விடையளிக்க.** **10x2=20**

31. கொடுக்கப்பட்டுள்ள வளங்களை வகைப்படுத்துக.

(நிலக்கரி, மண், நீர், இரும்பு)

| வ.எண் | புதுப்பிக்கக் கூடிய வளங்கள் | புதுப்பிக்க இயலா வளங்கள் |
|---|---|---|
| அ | | |
| ஆ | | |

32. வரிசைப்படுத்துக.

பூமி, செவ்வாய், நெப்டியூன், புதன், வெள்ளி, வியாழன், யுரேனஸ், சனி

33. பட விளக்கம் தருக.



______________________________________?



______________________________________?



www.TeacherTN.com

34. விண்மீன்கள் ஏன் சிறியவையாகத் தெரிகின்றன ?

35. உனக்கு விருப்பமான பருவ காலம் எது ? ஏன் ?

36. சாகுபடி முறைகள் ஏதேனும் இரண்டைக் கூறுக ?

37. சரணாலயம் என்றால் என்ன ?

38. ‘தண்டி யாத்திரை’ சிறு குறிப்பு வரைக.

39. மழைநீர் சேகரிப்பு என்றால் என்ன ?

40. காடுகளைப் பாதுகாக்கும் முறைகள் இரண்டைக் கூறுக.

**VIII ஏதேனும் ஒரு கேள்விக்கு விரிவான விடையளிக்க** **1x5=5**

41. சரணாலயத்தில் காணப்படும் விலங்குகள் பட்டியலிடுக.

42. மண் வளத்தைப் பாதுகாக்கும் முறைகள் யாவை ?

43. சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளை காலக்கோட்டில் படம் வரைந்து குறிக்க.

    1. கி.பி. 1600 _______________
    2. கி.பி. 1857 _______________
    3. கி.பி. 1905 _______________
    4. கி.பி. 1919 _______________
    5. கி.பி. 1942 _______________

**IX பட விளக்கம்** **1x5=5**

44. இந்திய தேசியக் கொடியை வரைந்து வண்ணம் தீட்டுக.



www.TeacherTN.com

# சமூக அறிவியல் – ஐந்தாம் வகுப்பு

## முதல் பருவம்

### பாடம் 1 முதல் 5 வரை

1. சங்க காலம்
2. உலகை வலம் வந்த பயணிகள்
3. நாம் வாழும் பூமி
4. அடையாளம் காணுவோம்
5. எங்கும் எதிலும்

உள்ளே ஒவ்வொரு பாடத்திலும்

- புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ&ஆ **[FA(a) &FA(b)]**
- கூடுதல் வளரறி மதிப்பீடு அ&ஆ **[FA(a) &FA(b)]**
- நினைவில் கொள்க



www.TeacherTN.com

# பாடம் 1 – சங்க காலம்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(a)

| வ.எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடு | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சங்ககாலம் | தனியாள் | 228 | 10 நிமிடம் | உன் விருப்பத்தை எழுதுக.<br>1. நீ அரசனானால்<br>2. அரசரின் சிறந்த பண்புகள். | மாணவரின் படைப் பாற்றலை அறிதல்.<br>மாணவரது கருத்து வெளியிடுதல் திறனை வளர்த்தல். |
| 2 | சங்ககாலம் | தனியாள் | 228 | 30 நிமிடம் | மூவேந்தர் கொடிகளைத் தயாரித்தல். | படைப்பாற்றல் திறனை சோதித்தல். |
| 3 | சங்ககாலம் | தனியாள் | 228 | 20 நிமிடம் | கீழே உள்ள மனவரைபடத்தைப் போல் சேரர்களுக்கும், சோழர்களுக்கும் மனவரைபடம் வரைந்து நினைவு கூர்தல். | மன வரைபடம் வரைதல். |
| 4 | சங்ககாலம் | தனியாள் | 228 | 1 வாரம் | நூலகத்தைப் பயன்படுத்தி குறிப் பெடுத்தல். | புள்ளி விபரங்களை சேகரிக்கும் திறனை சோதித்தல். |

### கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– FA(a)

செயல் – 1 : **கதாபாத்திரம் ஏற்று நடித்தல்**
பக்க எண் : **222, 223**
கால அளவு : **30 நிமிடம் (15 நிமிடம் தயாரிப்பிற்கு 15 நிமிடம் நடித்துக் காட்டல்)**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ் அரசர்களின் வரலாற்றை அறிதல்.**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

- ஆசிரியர் வகுப்பை மூன்று குழுக்களாகப் பிரித்தல்
- முதல் குழுவிற்கு சோழன் குறித்த பாடலையும், இரண்டாம் குழுவிற்கு சேரன் குறித்த பாடலையும், மூன்றாம் குழுவிற்கு பாண்டியன் குறித்த பாடலையும் ஆசிரியர் பிரித்துக் கொடுத்தல்.
- குழுவாகச் சேர்ந்து மாணவர்களை இப்பாடலுக்கு ஏற்ப நடிக்கச் செய்தல். வகுப்பறையில் கிடைக்கும் பொருள்களை வைத்து கதாப்பாத்திரத்திற்கேற்ப கிரீடம், வேல் போன்ற பொருள்களையும், பின்புலத்தையும் தயாரிக்க வழிகாட்டுதல். இவற்றிற்கு 15 நிமிடம் ஓதுக்கலாம்.
- தொடர்ந்து, தயாரித்த பொருள்களையும், பின்புலத்தையும் கொண்டு நடித்துக் காட்டுவதற்கு 15 நிமிடம் அளிக்கலாம்.
- ஒரு குழுவின் நடிப்பை, மற்ற இரு குழுக்களும் கவனித்து, நாடகத்தின் கருத்தை தொகுத்துக் கூறச் செய்தல்.

**பாடல்**

சேர சோழ பாண்டியரே
சிறிது நேரம் வந்திடுங்க
உங்களைப் பற்றிய சில
உண்மைகளை உரைத்திடுங்க
மன்னா வாருங்க உங்க
கதையைக் கூறுங்க

சிறுவர்களே சிறுவர்களே
சேரன் நானும் வந்தேனய்யா
சேரர்களில் சிறந்தவனாம்
செங்குட்டுவன் என்பெயராம்
கதையைக் கேளுங்க தம்பி
கதையைக் கேளுங்க / நடிப்பவர் 2 முறை
கதையைக் கூறுங்க மன்னா
கதையைக் கூறுங்க / மாணவர்கள் 2 முறை



www.TeacherTN.com

வஞ்சி எனும் தலைநகரில்
வாழ்ந்திருந்தேன் வளத்துடனே
தொண்டி மற்றும் முசிறி எனும்
துறைமுகத்தைக் கொண்டிருந்தேன்
கதையைக் கேளுங்க தம்பி
கதையைக் கேளுங்க / நடிப்பவர் 2 முறை
கதையைக் கூறுங்க மன்னா
கதையைக் கூறுங்க / மாணவர்கள் 2 முறை
கல்லெடுக்க இமயம் சென்றேன்
கங்கையிலே நீராட்டினேன்
கண்ணகிக்கு சிலை வடித்தேன்
காலெமெல்லாம் நிலைத்திருந்தேன்
போய் வரேங்க தம்பி
போய் வரேங்க / நடிப்பவர் 2 முறை
போய் வாருங்க மன்னா
போய் வாருங்க / மாணவர்கள் 2 முறை

சேர, சோழ, பாண்டியரே சிறிதுநேரம்
வந்திடுங்க
உங்களைப் பற்றிய சில
உண்மைகளை உரைத்திடுங்க
மன்னா வாருங்க உங்க
கதையைக் கூறுங்க (மாணவர்கள் 2 முறை)
தோழர்களே தோழர்களே
சோழன் நானும் வந்தேனய்யா
சோழர்களில் சிறந்தவனாம்
கரிகாலன் என் பெயராம்
கதையைக் கேளுங்க தம்பி
கதையைக் கேளுங்க ( நடிப்பவர் 2 முறை)
கதையைக் கூறுங்க மன்னா
கதையைக் கூறுங்க ( மாணவர்கள் 2 முறை)
புலிக்கொடி என்கொடிதான்
பூம்புகார் துறை முகமாம்
உறையூர் தலைநகராம்
உண்மை இது தோழர்களே ( நடிப்பவர் 2 முறை)
போய் வரேங்க தம்பி
போய் வரேங்க / நடிப்பவர் 2 முறை
போய் வாருங்க மன்னா
போய் வாருங்க / மாணவர்கள் 2 முறை

சேர, சோழ, பாண்டியரே
சிறிதுநேரம் வந்திடுங்க
உங்களைப் பற்றிய சில
உண்மைகளை உரைத்திடுங்க
மன்னா வாருங்க உங்க
கதையைக் கூறுங்க / மாணவர்கள் 2 முறை
பாலர்களே பாலர்களே
பாண்டியனும் வந்தேனய்யா
பாண்டியரில் சிறந்தவனாம் (இரண்டாம் )
நெடுஞ்செழியன் என்பெயராம்
கதையைக் கேளுங்க தம்பி
கதையைக் கேளுங்க / நடிப்பவர் 2 முறை



www.TeacherTN.com

கதையைக் கூறுங்க மன்னா
கதையைக் கூறுங்க / மாணவர்கள் 2 முறை
தலைநகர் மதுரையிலே
தமிழ் வளர்த்தேன் ஆர்வத்துடன்
தலையாலங்கானத்திலே
தகர்த்தெறிந்தேன் பகைவர்களை
கதையைக் கேளுங்க தம்பி
கதையைக் கேளுங்க / நடிப்பவர் 2 முறை
கதையைக் கூறுங்க மன்னா
கதையைக் கூறுங்க / மாணவர்கள் 2 முறை
கொற்கையே துறைமுகமாம்
மீன்கொடியே என்கொடியாம்
போயி வாரேன் தம்பிகளே
விடைகொடுங்கள் அன்புடனே
போய் வரேங்க தம்பி
போய் வரேங்க / நடிப்பவர் 2 முறை
போய் வாருங்க மன்னா
போய் வாருங்க / மாணவர்கள் 2 முறை

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

ஆசிரியர் மாணவர்களை மதிப்பீடு செய்ய கீழ்க்காணும் வழிமுறைகளைப் பயன்படுத்தலாம்.

⇒ மகிழ்ச்சியுடன் பங்கேற்கும் விதம்
⇒ தன் கதாப்பாத்திரத்தின் மேல் காட்டும் ஈடுபாடு
⇒ குழுவில் தன் பொறுப்புணர்தல் மற்றும் தன் பங்களிப்பு
⇒ பாடப்பொருளுடன் பாத்திரம் ஏற்று நடித்தலை தொடர்பு படுத்தும் விதம்
⇒ நடிப்பில் பின்புலம் மற்றும் நாடகத்திற்கான பொருள்களைத் திரட்டுவதிலும் தயாரிப்பதிலும் காட்டிய ஆர்வம்
⇒ மற்ற கதாபாத்திரங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் இணக்கம் / நல்லுறவு.

| | |
|---|---|
| செயல் – 2 | **: நடித்தல்** |
| பக்க எண் | **:223** |
| கால அளவு | **: 10 நிமிடம் (தயாரிப்பிற்கு) 15 நிமிடம் (நடித்தலுக்கு)** |
| செயல் வகை | **: குழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: சங்க காலத் தமிழ் சிற்றரசர்களின் வரலாற்றை அறிதல்.** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

ஆசிரியர் கீழ்க்காணும் தலைப்புகளில் மாணவர்களை தங்களுக்கு பிடித்த தலைப்பை தேர்ந்தெடுக்கச் செய்தல், பிறகு ஒரே தலைப்பை தேர்ந்தெடுத்தவர்களை ஒரு குழுவாக அமைத்து நாடகம் தயாரித்து நடிக்கச் செய்தல்.

1. கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பின் சிறப்பு
2. முல்லைக்குத் தேர்கொடுக்கும் பாரி
3. ஔவைக்கு நெல்லிக்கனி கொடுக்கும் அதியமான்
4. சிவனுக்கு ஆடை வழங்கும் ஆய் அண்டிரன்
5. கூத்தர்களுக்கு தன் நாட்டை பரிசாக வழங்கும் ஓரி
6. இரவலருக்குத் தன் குதிரையை வழங்கும் திருமுடிக்காரி
7. காட்டிலும் தன்னை நாடி வந்தவர்க்கு வேண்டியவற்றை வழங்கும் நல்லியக்கோடன்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

1. மாணவர்களின் ஆர்வம்
2. ஈடுபாடு
3. நடித்தல் திறன்
4. தலைப்பிற்கேற்ற நடிப்பு வெளிப்பாடு
5. நடிப்பை பாடப்பொருளுடன் தொடர்பு படுத்துதல்



www.TeacherTN.com

செயல் – 3 : படைப்பாற்றல்
பக்க எண் : 224
கால அளவு : 20 நிமிடம் (கலந்துரையாடல்–5 நிமிடம், தயாரிப்பு –10 நிமிடம், பார்வைக்கு வைத்தல்–5 நிமிடம்)
செயல் வகை : குழுச் செயல்பாடு
கற்றல் வெளிப்பாடு : சங்க காலத் தமிழ் அரசர்களின் கொடி மற்றும் சின்னங்களை அறிதல்

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்**

ஆசிரியர் மாணவர்களை சேரர், சோழர், பாண்டியர் என மூன்று குழுக்களாகப் பிரித்தல் ஒவ்வொரு குழுவையும், நீங்கள் அந்த அரசராக இருந்தால், உங்கள் நாட்டிற்குரிய கொடி, நாணயம், கல்வெட்டு ஆகியவைகளை எவ்வாறு தயாரிப்பீர்கள் எனக் கேட்டு மாதிரி தயாரிக்கக் கூறுதல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

- குழுவில் பங்களிப்பு
- பொறுப்புணர்வு
- குழு மனப்பான்மை
- ஆர்வம்
- படைப்பாற்றல்
- அழகுணர்ச்சி

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ– FA(b)

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சங்ககாலம் | தனியாள் | 227 | 15 நிமிடம் | 1. மூவரில் நான் யார் (சேரன், சோழன், பாண்டியன்) | வினாடி வினா |
| 2 | சங்ககாலம் | தனியாள் | 227 | 15 நிமிடம் | பொருத்துக | எழுத்துத்தேர்வு |
| 3 | சங்ககாலம் | தனியாள் | 227 | | குறுகிய வினாக்களுக்கு விடையளிக்க | |
| 4 | சங்ககாலம் | தனியாள் | 227 | | விரிவானவிடையளிக்க | |

**கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– FA(b)**

செயல் – 1 : இடங்காணல்
பக்க எண் : 224
செயல் வகை : குழுச் செயல்பாடு
கால அளவு : 10 நிமிடம்
கற்றல் வெளிப்பாடு : சங்க காலத் தமிழ் அரசர்களின் ஆட்சிப் பகுதிகளை அறிதல்

- ஆசிரியர் வகுப்பை மூன்று குழுக்களாகப் பிரித்தல்
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தமிழ்நாடு அரசியல் அமைப்பு புறவரிப்படத்தைக் கொடுத்தல்
- ஒரு குழுவை சேரர் ஆட்சிப்பகுதியையும் மற்றொரு குழுவை சோழர் ஆட்சிப் பகுதியையும், மற்றொரு குழுவை பாண்டியர் ஆட்சிப் பகுதியையும் புறவரிப்படத்தில் வண்ணமிட வழிகாட்டுதல்.
- இன்றைய மாவட்டங்களில் எவை எவை அன்றைய சேர, சோழ, பாண்டிய ஆட்சிப் பகுதிகளாக இருந்தன என்பதை வண்ணமிட்டு காட்டச் சொல்லுதல் / காட்டக் கூறுதல்.

**நினைவில் கொள்க**

பாடம் 1 பக்கம் 226–இல் உள்ள நினைவு கூறுவோம் அட்டவணையுடன் அரசர்களின் பெயர்களையும் நினைவு கூறச்செய்தல்.

சேர மன்னன் .. சேரன் செங்குட்டுவன்
சோழ மன்னன் .. கரிகாற்சோழன், கோப்பெருஞ்சோழன்
பாண்டிய மன்னன் .. பாண்டியன் நெடுஞ்செழியன்



www.TeacherTN.com

## பாடம் 2 – உலகை வலம் வந்தப் பயணிகள்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(a)

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | உலகை வலம் வந்தப் பயணிகள் | தனியாள் | 238 | 15 நிமிடம் | வரைபடத்தைப் பயன்படுத்தி பயணப் பாதைகளை வரைதல். | வரைபடத்திறனைச் சோதித்தறிதல். |

### கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– FA(a)

செயல் –1 : **வரைதல் மற்றும் படைப்பாற்றல்**

பக்க எண் : **235**

கால அளவு : **1 வாரம்**

செயல் வகை : **தனியாள் செயல்பாடு**

கற்றல் வெளிப்பாடு : **பிரபலமான கடல் பயணிகள் மற்றும் அவர்களின் பயணப் பாதைகளை அறிதல்**

### செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:

மாணவர்களை கீழ்க்காணும் செயல்பாடுகளை செய்யக் கூறுதல்.

பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

1. மெகலன் கடல்வழிப் பயணம்.
2. கிறிஸ்டோபர் கொலம்பஸ் கடல்வழிப்பயணம்.
3. வாஸ்கோடகாமா கடல் வழிப்பயண பாதைகளை உலக புறவரிப்படத்தில் வரைதல். பயணப் பாதைகளின் மேல் உல்லன்நூல், பசை, சம்கி கொண்டு ஒட்டி வரச் செய்தல்.
4. பயணப்பாதை தொடங்கும் இடத்தில் ஒரு சிறிய காகிதக் கப்பலை ஒட்டச்செய்தல். பயணம் முடியும் இடத்தில் ஒரு சிறிய காகிதக் கப்பலை ஒட்டச் செய்தல்.

### மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்

* நேர்த்தி
* அழகுணர்ச்சி
* பயணப்பாதை சரியாகக் குறிக்கப்பட்டுள்ளதா என சரி பார்த்தல்
* படைப்பாற்றல் திறன்
* கொடுக்கப்பட்ட கால அளவில் ஒப்படைத்தல்



www.TeacherTN.com

செயல் – 2 : உரையாடல்
பக்க எண் : 235
கால அளவு : 15 நிமிடம்
செயல் வகை : குழுச் செயல்பாடு
கற்றல் வெளிப்பாடு : பிரபல கடற் பயணிகளை அறிதல்

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

வகுப்பை மெகலன், கிறிஸ்டோபர் கொலம்பஸ், வாஸ்கோடகாமா என மூன்று குழுவாக பிரித்தல் இவர்கள் சந்தித்தால் என்ற தலைப்பில் தொடர்ந்து பேசச் செய்தல்.

மெகல்லன் : நாம் பயணம் செய்யும்பொழுது இவ்வளவு நீர்வழிப் போக்குவரத்துச் சாதனங்கள் இல்லை.

கிறிஸ்டோபர் கொலம்பஸ் : ஆம் மிகச்சரி. தற்போது நீர்ப்போக்குவரத்துச் சாதனங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன.

வாஸ்கோடகாமா : இப்போது நாம் எந்த நாட்டுக்கு கடல்வழி கண்டுபிடிக்கலாம் ?

( இந்த உரையாடலைத் தொடர்ந்து பேசச் செய்தல்)

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

- தடையின்றி பேசுதல்
- கற்பனைத்திறன்
- கருத்தை வெளியிடும் திறன்

செயல் – 3 : தொடர் அட்டவணைத் தயாரித்தல்
பக்க எண் : 229–235
கால அளவு : 10 நிமிடம்
செயல் வகை : தனியாள் செயல்பாடு
கற்றல் வெளிப்பாடு : பிரபல பயணிகள் மற்றும் வரலாறு அறிதல்

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

பாடத்தில் உள்ள பயணிகளின் பெயர்கள், வருடங்களைப் பார்த்து அவ்விவரங்களை வரிசைப்படுத்தி தொடர் அட்டவணை ( **Flow chart** ) தயாரித்தல்.

**உதாரணமாக:**

**நிலப்பயணம்**

பாகியான் கி.மு. 432 – 337
⬇
மெகஸ்தனிஸ் கி.மு. 350 – 290
⬇
யுவான் சுவாங் கி.பி 603 – 664
⬇
இபின் பதாதா கி.பி 1304 – 1368

**கடற்பயணம்**

மார்க்கோ போலோ கி.பி. 1324 – 1324
⬇
பார்த்தலோமியோடயஸ் கி.பி. 1450 – 1500
⬇
மெகல்லன் கி.பி.1480 – 1521
⬇
கிறிஸ்டோபர் கொலம்பஸ் கி.பி. 1451 – 1506
⬇
வாஸ்கோடகாமா கி.பி. 1460 – 1524

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

1. தகவல் சேகரிப்புத் திறன்
2. வரிசைக்கிரமாக எழுதுதல்
3. தொடர் அட்டவணை தயாரித்த விதம்
4. நேர்த்தி
5. ஆக்கத்திறன்



www.TeacherTN.com

செயல் –4 : செயல் திட்டம்
பக்க எண் : 230
கால அளவு : 1 வாரம்
செயல் வகை : தனியாள் செயல்பாடு
கற்றல் வெளிப்பாடு : பிரபல பயணிகள், வரலாற்றை அறிதல்.

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

மாணவர்களை, உலகை வலம் வந்த பயணிகள் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் அவர்களுக்குப் பிடித்த கடல்பயணி ஒருவரையும் நிலப்பயணி ஒருவரையும் தேர்ந்தெடுத்து அவர்களைப் பற்றிய குறிப்புகளைச் சேகரித்து எழுதி வரச்செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்**

- ஆர்வம்
- படைப்பாற்றல்
- தகவல் சேகரித்த விதம்
- தகவலை வெளிப்படுத்தும் திறன்
- தேடல் திறன்

**புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(b)**

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | உலகை வலம் வந்தப் பயணிகள் | தனியாள் | 237 | 15 நிமிடம் | சரியான விடையைத் தேர்ந்தேடுத்து எழுதுக | சிறு தேர்வு |
| 2 | உலகை வலம் வந்தப் பயணிகள் | தனியாள் | 237 | | கோடிட்ட இடத்தை நிரப்புக | சிறு தேர்வு |
| 3 | உலகை வலம் வந்தப் பயணிகள் | தனியாள் | 237 | | பொருத்துக | சிறு தேர்வு |
| 4 | உலகை வலம் வந்தப் பயணிகள் | தனியாள் | 237 | | சிறு வினாக்களுக்கு விடையளிக்க | சிறு தேர்வு |

**நினைவில் கொள்க**

பாடம் 2 பக்கம் 236 உள்ள மீட்டறிவோம் அட்டவணையை நினைவில் கொள்ளக் கூறுதல்.



www.TeacherTN.com

## பாடம் 3 – நாம் வாழும் பூமி
## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(a) – இல்லை

### கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– FA(a)

செயல் –1 : **மாதிரி தயாரித்தல் – புவியின் உள்ளமைப்பு**

பக்க எண் : **240**

கால அளவு : **1 வாரம்**

செயல் வகை : **தனியாள் செயல்பாடு**

கற்றல் வெளிப்பாடு : **புவியின் அடிப்படைத் தகவல்களை அறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

ஸ்பாஞ் பந்தினை கால்பகுதியாக வெட்டி எடுத்து அதில் புவியின் உள் அமைப்பை வண்ணம் தீட்டி வரச்செய்தல் ( வேறு பொருட்களைப் பயன்படுத்தியும் முயற்சி செய்யலாம்)

செயல் –1 : **மாதிரி தயாரித்தல் – உயிர்க்கோளம்**

பக்க எண் : **241**

கால அளவு : **20 நிமிடம்**

செயல் வகை : **தனியாள் செயல்பாடு**

கற்றல் வெளிப்பாடு : **உயிர்க்கோளத்தில் உயிர்கள் மற்றும் பொருள்களை அறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

இப்படத்தில் நிலக்கோளம், நீர்க்கோளம், வாயுக்கோளம், உயிர்க்கோளத்தில் உள்ள உயிர்கள் மற்றும் பொருள்களை வரையச் செய்தல்.

செயல்–3 : **மாதிரி தயாரித்தல் – பெருநிலத் தோற்றம்**

பக்க எண் : **241**

கால அளவு : **20 நிமிடம்**

செயல் வகை : **குழுச் செயல்பாடு**

கற்றல் வெளிப்பாடு : **புவியின் அடிபடைத் தகவல்கள், வரைபட புத்தகத்தை வாசிக்க புவிக்கோளத்தைப் பயன்படுத்தி அறிதல்.**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

உலக புற வரைபடத்தில் கண்டங்களை, பசை கொண்டு மணலால் ஒட்டியும் மற்றும் கடல்களை நீல வண்ணமிட்டும் தயாரித்து வரச்செய்தல்.

உலக வரைபடத்தில் கண்டங்களையும், கடல்களையும் வண்ணமிட்டு குறிக்கச் செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்: ( செயல் 1, 2, 3 க்கான முறை)**

1. ஆர்வம்
2. படைப்பாற்றல்
3. தயாரிப்பு முறை
4. நேர்த்தி
5. அணுகுமுறை



www.TeacherTN.com

செயல் –4 : **உரு மாதிரி / படத்தொகுப்பு தயாரித்தல் – நில அமைப்பு**
பக்க எண் : **245**
கால அளவு : **1 வாரம்**
செயல் வகை : **தனியாள் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **வெவ்வேறு வகையான நிலவெளிகளின் வடிவங்களை அறிதல்.**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

1. **உரு மாதிரி தயாரித்தல்**
   இமயமலை, தீவு, தீபகற்பம் மாதிரிகளை களிமண், தெர்மோக்கோல், அட்டை போன்ற பொருட்களைக் கொண்டு தயாரித்து வரச் செய்தல்.

2. **படத்தொகுப்பு தயாரித்தல்**
   மலைகள், சமவெளிகள், பள்ளத்தாக்கு, தீவு, தீபகற்பம் படங்களை செய்தித்தாள், வார, மாத இதழ்களில் இருந்து சேகரித்து ஒட்டி படத்தொகுப்பு தயாரித்து வரச் செய்தல்.

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

1. வேறுபடுத்துதல்
2. படைப்பாற்றல்
3. தயாரிப்பு முறை
4. நேர்த்தி

செயல்–5 : **சுவரொட்டி தயாரித்தல்**
பக்க எண் : **245**
கால அளவு : **20 நிமிடம்**
செயல் வகை : **தனியாள் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **புவி மற்றும் புவியியல் அறிவை வளர்த்தல்.**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

'பசுமையான பூமியை உருவாக்குவோம்' என்ற தலைப்பில் வாசகங்களை எழுதி அதற்குரிய படங்களை வரைந்து சுவரொட்டிகள் தயாரித்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- வாசகங்களின் தன்மை
- கருத்துச் செறிவு
- வரைதல் திறன்

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(b)

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | நாம் வாழும் பூமி | தனியாள் | 246 | 15 நிமிடம் | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | சிறு தேர்வு |
| 2 | நாம் வாழும் பூமி | தனியாள் | 246 | | கோடிட்ட இடத்தை நிரப்புக | சிறு தேர்வு |
| 3 | நாம் வாழும் பூமி | தனியாள் | 246 | | பொருத்துக | சிறு தேர்வு |
| 4 | நாம் வாழும் பூமி | தனியாள் | 246 | | சிறு வினாக்களுக்கு விடையளிக்க | சிறு தேர்வு |
| 5 | நாம் வாழும் பூமி | தனியாள் | 247 | 10 நிமிடம் | சொல் சிதறல்களை வரிசைப்படுத்தி பெருங்கடல்களையும், கண்டங்களையும் கண்டெடுத்து எழுதுக | வரைபடம் பார்த்து எழுதுதல். |
| 6 | நாம் வாழும் பூமி | தனியாள் | 247 | 10 நிமிடம் | உலக வரைபடத்தைப்பார்த்து கண்டங்களையும் பெருங்கடல்களையும் குறித்து வண்ணமிடுக | உலக புறவரிப் படத்தில் குறிக்க. |



www.TeacherTN.com

**நினைவில் கொள்க**

பூமியின் உள் அமைப்பை நான்காகப் பிரிக்கலாம். அவை,

1. மேல்ஓடு ( Crust )
2. புவியுறை ( Mantle )
3. வெளிப்பாறைக்குழம்பு ( Outer Core )
4. உள்பாறைக்குழப்பு ( Inner Core )

பூமிக்கோளத்தை நான்காகப் பிரிக்கலாம். அவை

1. நிலக்கோளம்
2. நீர்க்கோளம்
3. வாயுக்கோளம்
4. உயிர்க்கோளம்

கண்டப்பலகைகளின் மீது ஏழு கண்டங்கள் அமைந்துள்ளன. அவை,

1. ஆசியா
2. ஆப்பிரிக்கா
3. வட அமெரிக்கா
4. தென் அமெரிக்கா
5. ஐரோப்பா
6. ஆஸ்திரேலியா
7. அண்டார்டிகா

ஐந்து பெருங்கடல்கள் உள்ளன. அவை,

1. பசிபிக் பெருங்கடல்
2. அட்லாண்டிக் பெருங்கடல்
3. இந்தியப் பெருங்கடல்
4. அண்டார்டிக் பெருங்கடல்
5. ஆர்டிக் பெருங்கடல்



www.TeacherTN.com

## பாடம் 4 –அடையாயளம் காணுவோம்
## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(a) – இல்லை

### கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– FA(a)

| | |
|---|---|
| செயல்–1 | **: உரு மாதிரி செய்தல்** |
| பக்க எண் | **: 248, 249** |
| கால அளவு | **: 15 நிமிடம்** |
| செயல் வகை | **: குழுச் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | **: புவிக்கோளத்தை பயன்படுத்த தெரிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

- ஆசிரியர் மாணவர்களை 5 குழுக்களாகப் பிரித்தல்.
- 5 குழுவிற்கும் 5 வண்ணப் பந்துகளை அளித்தல்.
- முதல் குழுவை வடதுருவம், தென் துருவம் என தனித்தனி தாளில் எழுதி அதை குண்டுசியின் உதவியுடன் பந்தில் குத்தி அடையாளம் காட்டச் செய்தல்.
- இரண்டாம் குழுவை
  வண்ணநூால் (பசை), ஜமிக்கி(குண்டுசி), பருப்புகள்(பெவிகால்), மணிகள்(குண்டுசி) இவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு மாணவர்களிடம் உள்ள வண்ணப்பந்தில் அட்சக்கோடுகளை அமைக்கச் செய்தல்.
- மூன்றாம் குழுவை அவர்களிடம் உள்ள வண்ணப்பந்தில் தீர்க்கக் கோடுகளை வண்ண நூல் கொண்டு உருவாக்கச் செய்தல்.
- நான்காம் குழுவை பந்தில் நிலநடுக்கோடு, கடகரேகை, மகர ரேகை வண்ண நூலின் உதவியுடன் உருவாக்கச்செய்தல்
- ஐந்தாம் குழுவை பந்தில் கீரின்விச் தீர்க்கக் கோட்டை குண்டுசி (அ) ஜமிக்கியின் உதவியுடன் உருவாக்கச் செய்தல்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ✓ மாணவர்களின் ஈடுபாடு
- ✓ குழு மனப்பான்மை
- ✓ படைப்பாற்றல்
- ✓ பாடப்பொருளுடன் தொடர்பு மற்றும் சரிவர செய்தல்
- ✓ நேர்த்தி
- ✓ முழுமை

| | |
|---|---|
| செயல்–2 | **: விளையாட்டு** |
| பக்க எண் | **: 248, 249** |
| கால அளவு | **: 30 நிமிடம்** |
| செயல் வகை | **: குழுச் செயல்பாடு (வகுப்பறை முழுவதற்கும்)** |
| கற்றல் வெளிப்பாடு | **: புவிக்கோளத்தை பயன்படுத்த தெரிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

**பாடல்**

அட்சக்கோடு அட்சக்கோடு
வட்ட வட்டமாய் அட்சக்கோடு
கிழக்கு மேற்காய்
செல்லும் கோடு
அட்சக்கோடு அட்சக்கோடு
வட்ட வட்டமாய் அட்சக்கோடு

தீர்க்கக்கோடு தீர்க்கக்கோடு
மேலும் கீழுமாய் தீர்க்கக்கோடு
வடக்கு தெற்காய்
செல்லும் கோடு
தீர்க்கக்கோடு தீர்க்கக்கோடு
மேலும் கீழுமாய் தீர்க்கக்கோடு



www.TeacherTN.com

❖ பள்ளி மைதானத்தில் பெரிய வட்டம் வரைதல்.
❖ கோல மாவு உதவியுடன் ஆசிரியர் வடதுருவம் தென் துருவம் குறிக்கவும்.
❖ கிழக்கு, மேற்கு திசையையும் குறித்தல்.
❖ மாணவர்களை வட்டத்தில் அட்சக்கோடு பாடலை பாடிக் கொண்டே ஓடச் செய்தல்.
❖ ஆசிரியர் கைகளைத் தட்டிக்கொண்டிருக்கவும், தட்டும் ஓசையை நிறுத்திவுடன் மாணவர்கள் அட்சக்கோடு பற்றிய வரிகளைப் பாடியிருப்பின் கிழக்கு மேற்காக வரிசையாக நிற்க வேண்டும்.
❖ தீர்க்கக்கோடு பற்றிய வரிகள் எனில் வடக்கு தெற்காக நிற்க வேண்டும்.
❖ மாணவர்கள் அதிகம் உள்ள வகுப்பு எனில் இரு குழுக்களாகப் பிரித்து விளையாடச் செய்யலாம்

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

✓ மாணவர்களின் ஆர்வம், ஈடுபாடு, செயல்படும் விதம்.

✓ விளையாட்டின் வழிமுறைகள் மற்றும் விதிமுறைகளை கடைபிடிக்கும் விதம்.

✓ பாடத் தொடர்பு

| | |
|---|---|
| செயல் – 3 | : **வகுப்பறை வரைபடம் வரைதல்** |
| பக்க எண் | : **248, 249** |
| கால அளவு | : **20 நிமிடம்** |
| செயல் வகை | : **தனியாள் செயல்பாடு** |
| கற்றல் வெளிப்பாடு | : **புவிக்கோளத்தை பயன்படுத்த தெரிதல்** |

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

மாணவர்களை 1 செ.மீ இடைவெளியில் ஒருகோடு என 10 கட்டங்கள் குறுக்கும் நெடுக்குமாய் வரையச் செய்தல். அதில் அவர்களின் வகுப்பறை படத்தை வரையக் கூறுதல்




**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

✓ ஆர்வம்

✓ பாடத்தொடர்பு

✓ அமைவிடம்

✓ திசைகள்

✓ அளவு



www.TeacherTN.com

## புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ– FA(b)

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | அடையாளம் காணுவோம் | தனியாள் | 253 | 15 நிமிடம் | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | சிறு தேர்வுகள் நடத்தல் |
| 2 | அடையாளம் காணுவோம் | | 253 | | கோடிட்ட இடத்தை நிரப்புக | |
| 3 | அடையாளம் காணுவோம் | | 254 | | வினாக்களுக்கு விடையளி | |
| 4 | அடையாளம் காணுவோம் | | **254** | | வரைப்பட புத்தகத்தின் உதவி கொண்டு கீழ்க்காண்பவற்றைக் குறிக்கவும் | |

## கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு ஆ– FA(b)

செயல் –1 **: வரைபடத்தில் வண்ணமிடுதல்**
பக்க எண் **: 251**
கால அளவு **: 15 நிமிடம்**
செயல் வகை **: குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு **: இயற்கை அமைப்பு வரைபடத்தை பயன்படுத்த தெரிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

இயற்கை அமைப்பு வரைபடத்தில் இந்த நிலத்தோற்றங்கள், வண்ணங்கள் எவை வண்ணமிடுக

| நிலத்தோற்றங்கள் | வண்ணங்கள் |
|---|---|
| பெருங்கடல்கள், கடல்கள், ஆறுகள், ஏரிகள் | |
| சமவெளிகள் | |
| பீடபூமிகள் | |
| மலைகள், மலைத்தொடர்கள், குன்றுகள் | |

செயல்–2 **: பட்டியலிடச் செய்தல்**
பக்க எண் **: 249**
கால அளவு **: 10 நிமிடம்**
செயல் வகை **: குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு **: புவிக்கோளம் மற்றும் வரைபடத்தின் வேறுபாடு அறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

புவிக்கோளம் மற்றும் வரைபடங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை பட்டியலிடச்செய்தல் Globe மற்றும் Map மாணவர்களிடம் கொடுத்தல்.
புவிக்கோளம் கொண்டு

$0^0$ அட்சக்கோடு
$66^0$ 1/2 வட அட்சக்கோடு
$66^0$1/2 தென் அட்சக்கோடு

$23^0$ 1/2 வட அட்சக்கோடு
$23^0$1/2 தென் அட்சக்கோடு

அதன் பெயர், அது செல்லும் கண்டங்கள் ஆகியவற்றை கண்டறிந்து எழுதச்செய்தல்.
மாணவர்களை அவர்களது தாளில் வட்டம் வரையச்செய்தல். அதில்

- வட துருவம், தென் துருவம்
- கிரீன் விச் முதன்மை தீர்க்கக்கோடு
- நிலநடுக்கோடு
- கடகரேகை
- மகர ரேகை வண்ண பென்சிலின் உதவியுடன் குறிக்கச் செய்தல்



www.TeacherTN.com

**மதிப்பீட்டிற்கான வழிமுறைகள்:**

- ஆர்வம்
- அழகுணர்ச்சி
- சரியான வண்ணங்களைப் பயன்படுத்துதல்.
- சரியாக அடையாளம் காணுதல்.
- சரியாகக் குறித்தல்.

**நினைவில் கொள்க**

**( பக்கம் 248 )**

- அட்சக்கோடுகள் (Latitudes)
- புவிக்கோளத்தின் மீது கிழக்கு மேற்காக வரையப்பட்ட கற்பனைக்கோடுகள் அட்சக்கோடுகள் எனப்படும்.
- புவிக்கோளத்தின் நடுவில் வரையப்பட்டுள்ள $0^0$ அட்சக்கோட்டினை நிலநடுக்கோடு என்று கூறுகிறோம்.

**பக்கம் ( 249)**

- தீர்க்கக்கோடுகள் (Longitudes)
- புவிக்கோளத்தின் மீது வடக்குத்தெற்காக வரையப்பட்ட கற்பனைக் கோடுகள் தீர்க்கக்கோடுகள் எனப்படும்.
- வடதுருவம், தென்துருவம்
- கிரீன்விச் முதன்மை தீர்க்கக்கோடு
- நிலநடுக்கோடு
- கடகரேகை, மகரரேகை



www.TeacherTN.com

# <u>பாடம் 5– எங்கும் எதிலும்</u>

## <u>புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு அ– FA(a)</u>

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | எங்கும் எதிலும் | தனியாள் | 260 | 10 நிமிடம் | உன் பள்ளி வளாகத்தில் மண் வளம் காக்க நீ கையாளும் முறைகள் | தன் கருத்தை வெளியிடுதல் |
| 2 | எங்கும் எதிலும் | தனியாள் | 261 | 10 நிமிடம் | உன் ஊரில் மண் வளத்தைக் காக்க உனது ஆலோசனைகள் | தன் கருத்தை வெளியிடுதல் |
| 3 | எங்கும் எதிலும் | தனியாள் | 261 | 15 நிமிடம் | மண் வகைத்தன்மைகள் வளரும் பயிர்கள் இவற்றைக் காட்ட விளக்கப்படம் வரைந்து வகுப்பில் வைக்க | விளக்கப்படம் வரைதல் |
| 4 | எங்கும் எதிலும் | தனியாள் | 261 | 15 நிமிடம் | உனது ஊரில் காணப்படும் மண் வகைகளையும் அங்கு வளரும் தாவரங்களையும் காட்ட வண்ண வேறுபாட்டுடன் வரைபடம் வரைக | வரைபடம் வரைதல் |
| 5 | எங்கும் எதிலும் | குழுச் செயல் | 262 | 1 வாரம் | மண் வகை மாதிரிகளைச் சேகரித்து வரைபடத்தாளில் ஒட்டி காட்சிக்கு வைக்க | சேகரித்தல் படத்தொகுப்பு தயாரித்தல் |

**கூடுதல் செயல்பாடுகள் – வளரறி மதிப்பீடு அ– FA(a)**

செயல் – 1 : **தன் வரலாறு கூறுதல்**

பக்க எண் : **255**

கால அளவு : **20 நிமிடம்**

செயல் வகை : **தனிநபர் செயல்பாடு**

கற்றல் வெளிப்பாடு : **மண் உருவாகும் விதத்தை அறிதல்**

### செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:

- ✷ மண் உருவான கதையைக் கூறச்செய்தல்.
- ✷ மண் தன் வரலாறு கூறுதல்.

இவற்றில் ஏதேனும் ஒன்றை மாணவர்களைக் கூறச் செய்தல்

### மதிப்பீட் டிற்கான வழிமுறைகள்:

- ✷ படைப்பாற்றல்
- ✷ முறையாகச்செய்தல்
- ✷ ஆர்வம்



www.TeacherTN.com

செயல்–2 : **தனி நடிப்பு**
பக்க எண் : **256**
கால அளவு : **20 நிமிடம்( தயாரிப்பு – 10 நிமிடம், நடித்தல் – 10 நிமிடம் )**
செயல் வகை : **தனிநபர் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **மண்ணின் வகைகளை அறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

மாணவர்களை வண்டல்மண், கரிசல்மண், செம்மண், சரளை மண், பாலை மண் போன்று பாத்திரம் ஏற்று தன்னைப் பற்றிக் கூறி நடிக்கச் செய்தல். ( மண்ணின் சிறப்பு, அது காணப்படும் இடம், விளையும் பயிர்கள் ஆகியவற்றைக் கூறுதல். )

மணல் கிரீடம், அட்டை, மண் ஒட்டிய சார்ட்டை சட்டை போல் அணிந்து நடித்தல்.

**மதிப்பீட் டிற்கான வழிமுறைகள்:**

- ✷ ஆர்வம்
- ✷ பொருள்
- ✷ தயாரித்தல்
- ✷ பாடப்பொருள் தொடர்பு
- ✷ மண் பற்றிய பொதுவான செய்தி அறிதல்.

செயல் – 3 : **செயல் திட்டம்**
பக்க எண் : **257**
கால அளவு : **1 வாரம்**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **மண்ணின் வகைகள் மற்றும் அதன் பயன்களை அறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

மாணவர்களது ஊரில் காணப்படும் மண் வகைகளைச் சேகரித்து அதில் விளையும் உணவுப் பொருள்களைச் சேகரித்து அட்டையில் ஒட்டச் செய்தல்.

**மதிப்பீட் டிற்கான வழிமுறைகள்:**

- ✷ பொருள்கள்
- ✷ ஆர்வம்
- ✷ படைப்பாற்றல்
- ✷ தேடல்
- ✷ சேகரிப்பு

செயல்–4 : **கலந்துரையாடல்**
பக்க எண் : **258**
கால அளவு : **25 நிமிடம் ( தயாரிக்க 10 நிமிடம் , விவாதம் 15 நிமிடம் )**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **ஒவ்வொரு மண்ணின் தனித் தன்மைகளைஅறிதல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

நானே சிறந்தவன் என 'பலவகை மண்' தன் சிறப்பு குறித்து பேசி வாதாடுவது போல் மாணவர்களை 5 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு மண் பெயர் கொடுத்தல்.

- வகுப்பை 5 குழுவாகப் பிரிக்கவும்
- குழுவிற்கு ஒரு மண் வகை தலைப்புக் கொடுத்தல்
- அந்த மண் வகை குறித்து தகவல்களை சேகரித்து மற்ற குழுவுடன் கலந்துரையாடுதல்.

**மதிப்பீட் டிற்கான வழிமுறைகள்:**

- ✷ ஆர்வம்
- ✷ பங்கேற்றல்
- ✷ பாடக்கருத்துடன் தொடர்பு
- ✷ வெளிப்படுத்தும் திறன்



www.TeacherTN.com

செயல்–5 : **பட்டிமன்றம்**
பக்க எண் : **260**
கால அளவு : **30 நிமிடம் ( தயாரிக்க 15 நிமிடம் , விவாதம் 15 நிமிடம் )**
செயல் வகை : **குழுச் செயல்பாடு**
கற்றல் வெளிப்பாடு : **மண் வளங்களைப் பாதுகாத்தல்**

**செயல்பாட்டிற்கான வழிமுறைகள்:**

மண் வளத்தைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிப்பது இயற்கை உரமா ? செயற்கை உரமா ?

**மதிப்பீட் டிற்கான வழிமுறைகள்:**

- ✷ ஆர்வம்
- ✷ கருத்துவளம்
- ✷ கேள்வி

**<u>புத்தகத்தில் உள்ள வளரறி மதிப்பீடு ஆ– FA(b)</u>**

| வ. எண் | பாடத்தலைப்பு | செயல் வகை | பக்க எண் | கால அளவு | செயல்பாடுகள் | மதிப்பீட்டு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | எங்கும் எதிலும் | தனியாள் | 261 | 15 நிமிடம் | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | சிறு தேர்வு |
| 2 | எங்கும் எதிலும் | | 261 | | கோடிட்ட இடங்களை நிரப்புக | சிறு தேர்வு |
| 3 | எங்கும் எதிலும் | | 262 | | சரி, தவறு எனக் குறிப்பிடுக | சிறு தேர்வு |
| 4 | எங்கும் எதிலும் | | 262 | | பொருத்துக | சிறு தேர்வு |
| 5 | எங்கும் எதிலும் | | 262 | | குறுகிய விடையளிக்க | சிறு தேர்வு |
| 6 | எங்கும் எதிலும் | | 262 | | விரிவான விடையளிக்க | சிறு தேர்வு |
| 7 | எங்கும் எதிலும் | | 263 264 | | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | சிறு தேர்வு |

**நினைவில் கொள்க**

இந்தியாவில் காணப்படும் மண்வகைகள்

1. வண்டல்மண்
2. செம்மண்
3. பாலைமண்
4. கரிசல் மண்
5. சரளை மண்



www.TeacherTN.com

## முதல் பருவ பாடத்திட்டம் – 5ஆம் வகுப்பு

| வ.எண் | பாடத் தலைப்பு | பாட வேளைகள் | பாடப்பொருள் |
|---|---|---|---|
| 1. | சங்க காலம் | 7 | முச்சங்கம்<br>மூவேந்தர்கள்<br>சேரர், சோழர், பாண்டியர்<br>குறுநில மன்னர்கள்<br>கடையேழு வள்ளல்கள்<br>சங்கப் புலவர்கள் |
| 2. | உலகை வலம் வந்த பயணிகள் | 7 | நிலப்பயணிகள்<br>• மெகஸ்தனிஸ்<br>• பாஹியான்<br>• யுவான் சுவாங்<br>• இமின் பதாதா<br>கடற்பயணிகள்<br>▪ மார்க்கோபோலோ<br>▪ பார்த்தலோமியோ டயஸ்<br>▪ மெகல்லன்<br>▪ கிறிஸ்டோபர் கொலம்பஸ்<br>▪ வாஸ்கோடகாமா |
| 3. | நாம் வாழும் பூமி | 7 | பூமியின் தோற்றம்<br>♦ நிலக்கோளம்<br>♦ நீர்க்கோளம்<br>♦ வாயுக்கோளம்<br>♦ உயிர்க்கோளம்<br>பெருநிலத் தோற்றம்<br>★ மலைகள்<br>★ பீடபூமிகள்<br>★ பள்ளத்தாக்குகள்<br>★ சமவெளிகள்<br>பெருங்கடல்களின் தோற்றம்<br>✷ தீபகற்பம்<br>✷ தீவு<br>பூமியைப் பாதுகாப்போம் |
| 4. | அடையாளம் காணுவோம் | 7 | புவிக்கோளம் தீர்க்கக் கோடுகள்<br>அட்சக்கோடுகள்வரைபடங்கள்<br>வரைபடப் புத்தகம் |
| 5. | எங்கும் எதிலும் | 8 | மண் உருவாதல்<br>வண்டல் மண்<br>கரிசல் மண்<br>செம்மண்<br>சரளை மண்<br>பாலை மண் |



www.TeacherTN.com

# சமூக அறிவியல் – வினா திட்ட வரைவு (V)

**மொத்த மதிப்பெண்கள் (60)** **நேரம்:2 மணி**

| வ. எண் | பாடம் | அறிதல் (21) | | | புரிதல் (18) | | | பயன்படுத்துதல் (12) | | | திறன் (9) | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | புறவய வினா | குறு வினா | பெரு வினா | புறவய வினா | குறு வினா | பெரு வினா | புறவய வினா | குறு வினா | பெரு வினா | புறவய வினா | குறு வினா | பெரு வினா | |
| 1 | 1 | 2 (1) | 1 (2) | | 2 (1) | 1 (2) | | 2 (1) | | | | | | 10 |
| 2 | 2 | 2 (1) | 1 (2) | | 2 (1) | 1 (2) | | 2 (1) | | | | | | 10 |
| 3 | 3 | 2 (1) | 1 (2) | | 1 (1) | | | 2 (1) | 1 (2) | | 1 (1) | | | 10 |
| 4 | 4 | 2 (1) | 1 (2) | | 1 (1) | | | 2 (1) | | | 1 (1) | 1 (2) | | 10 |
| 5 | 5 | 3 (1) | 1 (2) | | 1 (1) | 1 (2) | | 2 (1) | | | | | | 10 |
| மொத்த மதிப்பெண்கள் | | | | 1 (5) ★ | | | 1 (5) | | | 1 (5) ★ | | | 1 (5) | 10(10) ★ |
| | | 11 | 10 | 1 (5) ★ | 7 | 6 | 5 | 10 | 2 | 1 (5) ★ | 2 | 2 | 5 | 60(10) ★ |

குறிப்பு:-

- அடைப்புக் குறியீட்டுக்குள் கொடுக்கப்பட்டவை மதிப்பெண்கள்.
- அடைப்புக் குறிக்கு வெளியே இருப்பது வினா எண்ணிக்கை.

★ 10 மதிப்பெண்கள் உபரி வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

- ஒரு பெருவினா, திறன் பகுதியில் நில வரைபடமாக (Map work) அமைதல் வேண்டும். மற்ற பெரு வினாக்கள், நில வரைபடம் கொடுக்கப்படாத நான்கு பாடங்களிலிருந்து இடம் பெற வேண்டும்.



www.TeacherTN.com

## முதல் பருவத்தேர்வு– ஐந்தாம் வகுப்பு

காலம்: 1 ½மணி நேரம் மதிப்பெண்கள்: 60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5x1=5**

1. சேரர்களின் கொடி _________
(வில், புலி, மீன்)
2. பல்லவர் காலத்தில் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்த பயணி _________
(பாஹியான், யுவான்சுவாங், மார்கோபோலோ)
3. தக்காணப் பீடபூமி அமைந்துள்ள கண்டம் _________
( ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா)
4. அடிப்படை திசைகள்_________
(மூன்று, ஐந்து, நான்கு)
5. உணவுப் பயிர்களில் ஒன்று _________
(நெல், தேயிலை, பருத்தி)

**II கோடிட்ட இடத்தை நிரப்புக 5x1=5**

6. பாண்டியர்களின் தலைநகரம் _______
7. இந்தியாவில் இருந்த மிகப்பழைமையான பல்கலைக்கழகம்_______
8. மூன்று பக்கங்கள் நீரினாலும் ஒரு பக்கம் நிலத்தாலும் சூழப்பட்டுள்ள நிலத்தோற்றம் _______ எனப்படும்.
9. வரைபடங்களின் தொகுப்பே _______ ஆகும்.
10. மண் அரிப்பைத் தடுக்க _______வளர்க்க வேண்டும்.

**III குழுவில் பொருந்தாத வார்தைகளை வட்டமிடுக. 5x1=5**

11. பனம்பூ, அத்திப்பூ, ரோஜாப்பூ, வேப்பம்பூ
12. மெகஸ்தனிஸ், பாஹியான், கடற்பயணம், யுவான்சுவாங்
13. இந்திய பெருங்கடல், வட அமெரிக்கா, அட்லாண்டிக் பெருங்கடல், பசிபிக் பெருங்கடல்
14. மலைகள், ஆறுகள், மலைத்தொடர்கள், குன்றுகள்
15. சப்பாத்திக்கள்ளி, ஏலம், கிராம்பு, மிளகு

**IV ஒரே வார்த்தையில் விடை தருக. 5x1=5**

16. மூவேந்தர்கள் யாவர் ?
17. இந்தியாவை வாஸ்கோடகாமா எவ்வழியாக வந்தடைந்தார் ?
18. நெல், எவ்வகை மண்ணில் விளையும் ?
19. புவிக்கோளத்தின் மீது கிழக்கு மேற்காக வரையப்படும் கற்பனைக்கோடுகள் யாது ?
20. பெருங்கடல்களை விடக் குறைந்த நீர்ப்பரப்புகள் எவ்வாறு அழைக்கப்படும் ?



www.TeacherTN.com

**V சரி (√) தவறு (ü) எனக் குறிப்பிடுக.** **5x1=5**

21. தாவர வேர்கள் மண் அரிப்பைத் தடுக்கின்றன.
22. புவிக்கோள மாதிரியை நாம் செல்லும் இடங்களுக்கு எடுத்துச் செல்வது சிரமம்.
23. இலங்கை ஒரு தீபகற்பம்.
24. யுவான் சுவாங் ஒரு சீனப் பயணி.
25. சோழரின் துறைமுகம் காவேரிப்பூம்பட்டிணம்.

**VI பொருத்துக** **5x1=5**

| | | |
|---|---|---|
| 26. தென்மதுரை | – | மைய தீர்க்கக்கோடு |
| 27. இந்தியா | – | மிலியொன் –2 |
| 28. வண்டல் மண் | – | முதற்சங்கம் |
| 29. 0° கீரின்விச் | – | தீபகற்பம் |
| 30. மார்கோபோலோ | – | ஆற்றுக் கழிமுகம் |

**VII ஓரிரு வார்த்தைகளில் விடை தருக.** **10x2=20**

31. பயணம் என்றால் என்ன ?
32. கரிகாலன் யார் ? அவருடைய சிறப்புகள் யாவை ?
33. புயல் முனை என்றால் என்ன ?
34. கரிசல் மண் பற்றி சிறு குறிப்பு வரை ?
35. சங்ககாலத்தில் வாழ்ந்த சிறந்த புலவர்களில் சிலரின் பெயர்களைக் குறிப்பிடுக.
36. மெகஸ்தனிஸ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளவை யாவை ?
37. புவியை நீ எவ்வாறு பாதுகாப்பாய் ?
38. தீர்க்கக்கோடு என்றால் என்ன ?
39. கீழ்க்கண்டவற்றை வகைப்படுத்துக.
    (கிறிஸ்டோபர் கொலம்பஸ், யுவான் சுவாங், மார்கோபோலோ, மெஸ்தனிஸ்)

| வ.எண் | நிலப்பயணம் | கடற்பயணம் |
|---|---|---|
| அ | | |
| ஆ | | |

40. புவிக்கோளத்தில் 0° அட்சரேகையை வரைந்து அதன் பெயரைக் குறிக்கவும்.

0°





www.TeacherTN.com

VIII விரிவான விடையளி (ஏதேனும் ஒன்றிற்கு). 1x5=5

41. இந்தியாவில் காணப்படும் மண் வகைகளைப் பற்றி கட்டுரை வரைக.

42. புவிக்கோளத்திற்கும் வரைபடங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?

43. மண் வளப்பாதுகாப்பு உத்திகளைக் கூறுக.

XI உலக வரைபடத்தில் குறிக்கவும். 1x5=5

44. ஆசியா

45. ஆஸ்திரேலியா

46. ஐரோப்பா

47. பசிபிக் பெருங்கடல்

48. வட அமெரிக்கா



www.TeacherTN.com